பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 24 புதன்கிழமை (08.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 224

# தமிழர் மீளக்குடியமர்வையும் அதிகாரப் பகிர்வையும் மிகவிரைந்து செயற்படுத்த இந்தியா வலியுறுத்துகிறது

## யாழ். வந்த இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

★ வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் விரைவாக மீள் குடியமர்த்தப்பட வேண்டும்.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கலை விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த இரு விடயங்களையும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்த விடயங்களுக்கு முழு ஆதரவையும் வழங்கி வருகிறது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் இதனைத் தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டு வந்துள்ள இந்தியத்தூதர் நேற்று மாலை யாழ். ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக் குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் இப்படிக் கூறினார்.

நல்லை ஆதீனமுதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். ஆயர் அருள் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபை பேராயர் எஸ். தியாகராஜா, இலங்கை திருச்சபையின் குருமுதல்வர் வண. பி.நேசகுமார், மெதடிஸ்த திருச்சபையின் வண. எஸ். கதிர்காமர் உட்பட மக்கள் குழு உறுப்பினர்கள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, அபிவிருத்திப் பணிகள், அதிகாரப் பகிர்வு ஆகியன தொடர்பாக மக்கள் குழுவினர் தூதரிடம் எடுத்துக்கூறினர்.

அதற்கு பதிலளித்த தூதர் - இடம்பெயர்ந்து வவுனியாவில் வாழும் மக்களை நேரில் சந்தித்துள்ளேன். அங்கு பல குறைபாடுகள் இருப்பதை (16 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த போ...

# தமிழர் வாழ்வைக் கட்டி எழுப்புவதே அரசாங்கத்தின் ஒரே நோக்கம்

## நல்ல எதிர்காலம் அமையும் என்கிறார் பிரதமர்



கொழும்பு, ஜூலை 08

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் இருக்கின்ற வடக்குத் தமிழ் மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதே அரசின் ஒரே நோக்கம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர், தமிழ் மக்களுக்கு விரைவில் நல்லதொரு எதிர்காலம் அமையும் என்றும் கூறினார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பொறியியலாளர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜூலை 08

விடுதலைப் புலிகளின் சார்பில் இணையத்தளங்கள் ஊடாக அரசிற்கு எதிராக தகவல்களை வெளியிட்டு வந்தார் எனக் கூறப்படும் தமிழ்ப் பொறியியலாளர் ஒருவர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான இவர், கிளிநொச்சி மற்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப்பொருள்களுடன் கப்பல் நேற்று சென்னையிலிருந்து கொழும்பு புறப்பட்டது

சென்னை, ஜூலை 8

ஐரோப்பாவில் வாழும் புலம்பெயர் தமிழர்களால் இலங்கைத் தமிழருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த 'கப்டன் அலி'(வணங்கா மண்) என்ற கப்பலில் இருந்த பொருள்கள் 'கொலராடோ' கப்பல் மூலம் இலங்கைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

திங்கட்கிழமை நள்ளிரவு கொலராடோ (16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி மக்களின் அவல நிலையை சபையில் விவரிக்கும் வேளை தேம்பி அழுதார் பத்மினி

கொழும்பு,ஜூலை8

வவுனியா அகதி முகாம் களில் தங்கியுள்ள மக்க ளின் அவலநிலை தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் உணர்வு பீறிட உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தேம்பித் தேம்பி அழுதார்.



நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவா தம் நாடாளுமன்றில் இடம் பெற்றுக்கொண்டிருந்தது. தமிழ்த் தேசி யக் (16 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்கு அடிபணிந்தே 13 ஆவது திருத்தத்தை அரசு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கிறது

## நாடாளுமன்றில் ஜே.வி.பியின் விஜித சாடல்

கொழும்பு,ஜூலை8

இந்தியாவின் பணத்திற்கும் அதி காரத்திற்கும் அடிப ணிந்தே இலங்கை அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றது - என்று ஜே.வி.பி. நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியது.

இந்தியா, இலங்கையின் நிலைமை தொடர்பாகவும் தமிழர்களின் நிலைமை தொடர்பாகவும் நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு இலங்கையின் வளங்களைச் சுரண்டி வருகின்றது என்றும், இலங்கை அரசு அதற்கு இடமளித்து வருகின்றது என்றும் அக்கட்சி மேலும் கூறியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் இவ்வாறு கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச்சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 8

நாட்டில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை 92 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாமில் இருவர் கைது!

### தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோராம்

கொழும்பு, ஜூலை 8

அனுராதபுரம் விமானப்படைத் தளம் மீதான தாக்குதல் மற்றும் திகம்பத்தான பிரதேசத்தில் கடற்படையினர் கொல்லப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு பிரதான சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (16 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

நாளை


தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு
ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

## பூங்காவன உற்சவம்
## இனறு(08.07.2009) புதன்



கும்ப பூஜை: பி.ப. 5 மணி
மூலஸ்தான பூஜை: பி.ப. 5.30 மணி
வசந்த மண்டபப் பூஜை: பி.ப. 6 மணி

தொடர்ந்து அம்பாள் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் வீதியுலா வருதல்.

அதனைத்தொடர்ந்து இடம்பெறும் நிகழ்ச்சிகள்

1. கோண்டாவில் வி.கே. பஞ்சமூர்த்தி குமரேஸ் குழுவினர் வழங்கும் நாதஸ்வர நிகழ்ச்சி.
2. நல்லூர் 'ராகம்ஸ்' இசைக்குழுவினர் வழங்கும் ரி. சந்திரனின் இதயராகங்கள் இசை நிகழ்ச்சி

மணிமண்டப உபயகாரரும்
திருவிழா உபயகாரரும்.



## மானி.மகளிரின் மனம் நிறைந்த நன்றிகள்



மாகாணமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் எமது மாணவிகள் பங்குபற்றி முதலாம் இடத்தைப்பெற்றுக்கொள்ள சிரமமில்லாத போக்குவரத்து வசதியினைச் செய்து தந்ததுடன் அவர்களுக்கான உணவு வசதியினையும் தாமே தமது செலவில் பொறுப்பேற்று வழங்கியமைக்கும், எமது மாண்புமிகு சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ

**திரு.கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்
அவரோடு உறுதுணையாக நின்று உழைத்துவரும் யாழ். மாவட்ட அமைப்பாளர்

**திரு.உதயன்**

அவர்களுக்கும் மானி. மகளிரின் மனம் நிறைந்த நன்றிகள்.

அதிபர்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## POST OF MANAGER

Uthayan News Paper requires a Manager with the following capabilities.
Retired Employees/Executives of Government Departments, state Corporations, reputed private Companies may also apply.

- Fluency in English Language.
- Handling correspondence independently.
- Ability to handle General Administration.
- Computer literacy is an added qualification.
- Knowledge of Sinhala Language is advantageous.
- Salary negotiable.

Please apply before 20.07.2009 with copies of testimonials to.(Please give your contact number in your application)

**The General Manager,**
**New Uthayan Publication (Pvt) Ltd,**
**361, Kasthuriyar Road,**
**Jaffna.**

## WANTED RECEPTIONIST

Uthayan News Paper requires a Receptionist with the following capabilities.

- G.C.E (A/L) Qulified.
- Should be below 50 years of Age.
- Competency in typing.
- Computer literacy is essential.
- Handling of Telephone Calls.
- Knowledge of English Language essential
- Knowledge of Sinhala Language is advantageous.
- Those who possess the above qulifications may apply before 20.07.2009.

(Please give your contact number in your application)

**The General Manager**
**New Uthayan Publication (Pvt) Ltd,**
**361, Kasthuriyar Road, Jaffna.**

## எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்

எமது கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளையின் தலைவர்
நா. விஜயகுமார் அவர்களின் தந்தையார்
அமரர் **சுப்பிரமணியம் நாகராஜா** அவர்களின்
ஆத்ம சாந்திக்காக எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்சங்கம்,
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்,

# சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை விஜயம்

கொழும்பு, ஜூலை 8

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மீண்டும் இலங்கை வந்துள்ளனர்.

இலங்கை அரசு கோரியுள்ள 190 கோடி டொலர் கடனுதவி குறித்து கலந்துரையாடும் முகமாகவே அவர்கள் இங்கு வந்துள்ளனர்.

இந்தப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது எனப் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் சிறந்த நிலைக்கு வந்துள்ள நிலையில், இந்தக் கடனுதவி கோரப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலின் பின்னர் குறித்த கடன் அனுமதி இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

# பொலிஸார் - இளைஞர்கள் மடகலை நகரில் கைகலப்பு!

கண்டி, ஜூலை 08

கண்டி, மடகலை நகரில் நேற்று முன்தினம் மாலை பொலிஸாருக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஆறு பொலிஸாரும் இளைஞர்கள் சிலரும் காயமடைந்தனர்.

மடகலை நகரில் விளையாட்டு மைதானம் ஒன்றில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மற்றும் அப்பகுதியில் மதகு ஒன்றில் இருந்த இளைஞர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலேயே இந்தக் கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அப்பகுதியில் சில இளைஞர்கள் போதைப்பொருள் வைத்திருக்கின்றனர் எனத் தமக்குத் தகவல் கிடைத்ததையடுத்துத் தாங்கள் அப்பகுதிக்குச் சென்றபோதே அங்கு மோதல் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காயமடைந்த வத்தேகம பொலிஸ் பொறுப்பதிகாரி இந்திக பண்டார உட்பட நால்வர் கண்டி போதனா வைத்தியசாலையிலும் ஏனைய இரு பொலிஸார் வத்தேகம வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற ஐ.தே.கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் லாசீர் ஜெயினுலாப்தீனின் வாகனமும் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ-சி)

### வீடு விற்பனைக்கு

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணையில்
வீட்டுடன் கூடிய காணி
விற்பனைக்கு உண்டு.
ஐயனார் கோயிலுக்கு அண்மையில்
தொடர்பு: 0777821983

### வேலைக்கு ஆள்தேவை

பான்சிகடை ஒன்றுக்கு பணிப்பெண்கள் தேவை.
தொடர்பு: 0774275253
நல்லூர் பிரதேச சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

## புலமைப்பரிசில் (மாதிரிப்) பரீட்சை

- கொழும்பு பிரபல சிங்கள - தமிழ் வெளியீட்டாளர் 'பிரசன்ன லியனகேயின்' தரம்5 2009 ஜூலைக்குரிய 15 ஆம் , 16 ஆம் பரீட்சை எமது நிறுவனத்தில் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

09.07.2009 வியாழன் 3.30 p.m.
10.07.2009 வெள்ளி 3.30 p.m.
11.07.2009 சனி (இருநேரம்) 9 a.m. 3 p.m.

- திருத்தம் செய்யப்பட்டு விடைத்தாளுடன் விளக்கம் அளிக்கப்படும்
- முற்பதிவு செய்வது அவசியம்
- அனேக எதிர்பார்ப்பு வினாக்களை கடந்த காலங்களில்வெளியிட்ட பெருமைக்குரியது.
- இலக்கம் 1-14 வரையான வினாத்தாள்களை தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**கற்குமி கல்வி நிறுவனம்**
166, நாவலர் வீதி,யாழ்.
தொ.பே.: 222 7442

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 08 - 1924
மறைவு 22 - 06 - 1995

**கணபதிப்பிள்ளை அண்ணாமலை**
(முன்னாள் கிராம சபைத் தலைவர்)

கண்ணின் மணிபோல மணியின் நிழல்போல
எங்கள்குடும்பத்துடன் கலந்து இருக்கும்
அம்மையாவின் நினைவு மண்ணும்
கடல் வானும் மறைந்து முடிந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது

மருமகன்: வே.வன்னிமரம்
(கிராம அலுவலர்),
மகள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் தி.கு.

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப துறவற சபையைச் சேர்ந்தவரும் இச்சபையின் முன்னாள் யாழ்ப்பாண மாகாணத் தலைவியாகப் பணியாற்றியவருமான அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் நேற்று (07.07.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் 11.07.2009 அன்று பி.ப. 3.30 மணிக்கு பம்பலப்பிட்டி புனித மரியாள் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி நிறைவேற்றப்பட்டு யாவத்தை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இவரது ஆன்மா சாந்தியடைக.

மாகாணகத் தலைவி, தி.கு.மாகரண இல்லம்,
யாழ்ப்பாணம்

## திருமதி கமலம் கதிராமன்



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலம் கதிராமன் (07.07.2009) செவ்வாய்க்கிழமை அதிகாலை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிராமனின் அன்பு மனைவியும், கனகராணி (டென்மார்க்), நாகராசா (ஐயர், கதிரொளி வீடியோ), தேவராணி (சுவிஸ்), ஜெயராணி, செல்வராணி (கனடா), லலிதாராணி (லண்டன்), கிருபாராணி, ஜீவராணி (லண்டன்), முகுந்தன் (டோகா) ஆகியோரின் அருமைத் தயாரும், தர்மலிங்கம் (அருள்), சோதீஸ்வரி (ஆசிரியை, குருசாமி வித்தியாலயம், கைதடி), நமசிவாயம், சுசீந்திரராஜா, குணலிங்கம், சுரேந்திரன், தர்மராசா (ரகு), சிலோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் அமரர் கந்தையாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெறவுள்ளன.இது பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கதிரொளி வீடியோ,
கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
0776165255, 0778020703

## கிட்டினன் சின்னத்துரை (கோணர்)

(ஓய்வுபெற்ற சாரதி, நகரசபை, வல்வெட்டித்துறை)



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட கிட்டினன் சின்னத்துரை நேற்று (07.07.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திலகபூபதியின் அன்புக் கணவரும், புஸ்பராணி, கோபாலகிருஷ்ணன், ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2009) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 11 மணியளவில் வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோவிலடி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி..

தகவல்
குடும்பத்தினர்

## நடராசா கமலாம்பிகை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கமலாம்பிகை நேற்று(07.07.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம் நடராசாவின் அன்பு மனைவியும் சிவன்சோதி, விஜயவர்த்தனி, மகேஸ்வரன், கந்தசாமி, சரஸ்வதி, ஜெகசோதி, செந்தில்குமரன் (யாழ். மேல் நீதிமன்றம்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவஞானமூர்த்தி, நாகவேல் ராசா, சர்வேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் இந்துஷா, கேமிலா, கஜானந், கஜானி,காலஞ்சென்ற டயானி மற்றும் நவநீதன், லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(08.07.2009) புதன்கிழமை பி.ப.2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப்பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
செந்தில் குமரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தள்ளிப்போகும் தீர்வு முயற்சிகள்

*★ இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண்பதற்கு வாய்ப்பே இல்லை.*

*★ அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்தே தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்படும். அதுவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பிறகே தீர்வுத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.*

*★ வன்னியில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் நடமாட்ட சுதந்திரம் இப்போதைக்கு சாத்தியப்படாது.*

நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்திவிட்டார். இந்த'அரசியல் நிலைப்பாடுகளை அவர் எடுத்திருக்கின்றமை சரியா, தவறா என்பது வேறு விடயம். ஆனால் தமது உத்தேசம் - திட்டம் - போக்கு எப்படி அமையும் என்பதை வெளிப்படையாக அவர் தெரியப்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்பில் பேரம் பேசும் சக்தியாக விளங்கிய விடுதலைப் புலிகளின் ஆயுத பலம் என்ற வலிமை இலங்கை அரசுப் படைகளின் இராணுவ நடவடிக்கைகள் மூலம் முறிக்கப்பட்டபோதே தென்னிலங்கை ஆட்சிப்பீடம் இத்தகைய ஒரு நிலைப்பாட்டையே அதன்பின் கைக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது இப்போது நிஜத்தில் நடக்கின்றது. அவ்வளவுதான்.

விடுதலைப் புலிகள் ஆயுத பலத்தோடு - சம அந்தஸ்தோடு - இலங்கை அரசுத் தரப்புடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்து பேசியபோது 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர்வது குறித்துப் புலிகளுடன் சேர்ந்து பேசத் தயார்!' என ஒஸ்லோ கூட்டறிக்கை என்ற சர்வதேச ஆவணம் மூலம் ஒப்புக்கொண்ட இலங்கை அரசு, இப்போது விடுதலைப் புலிகள் முற்றாக அழித்து ஒழிக்கப்பட்டதும், சமஷ்டி என்ற கதைக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் நியாயமான ஒரு விடயம் உண்டு. எந்தத் தீர்வும் ஒரு தரப்பின் மீது மறுதரப்புப் பிரயோகிக்கும் வலிமை, அடக்குமுறை, பலம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக அமையக்கூடாது. அதுபோல எண்ணிக்கையில் பெரும்பான்மையினர், எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கு விட்டெறியும் 'பிச்சை' ஆகவும் அது அமையக்கூடாது. அது போலவே அத்தகைய தீர்வு எத்தனங்களுக்கு ஆதரவு அளிப்போரின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அது தீர்மானிக்கப்படக்கூடாது.

எந்தத் தீர்வும் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு அல்லது இனத்துக்கு நீதி, நியாயம் செய்வதாக அமைவதே மிக முக்கியமானதும் பிரதானமானதுமாகும். அது நீதியாக, நியாயமாக அமைவதன் காரணத்தால் அதைப் பெரும்பான்மையினர் ஆதரிப்பதாக இருக்கவேண்டுமே தவிர, மறுபுறமாக பெரும்பான்மையினர் விரும்பும் தீர்வே நீதி, நியாயமானதாக அர்த்தம் பண்ணப்படக் கூடாது.

ஆனால், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு என்பது, அவர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வது என்பதிலும் பார்க்க, தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாத மக்கள் அவர்களுக்கு எதுவரை விட்டுக் கொடுக்கத் 'தாராளம்' கொண்டுள்ளனரோ அதுவரையே என்பதுபோல தென்னிலங்கை அரசியல் தலைமையால் வரையறை செய்யப்படுவதுதான் வேதனைக்குரியது; விசனத்துக்குரியது.

தாம் ஆட்சிக்கு வந்தால் அடுத்த மூன்று மாதங்களில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்க முடிவைக் கண்டறிந்து வெளிப்படுத்துவார் என்றும், இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்றும் அறிவித்தே - தேர்தல் வாக்குறுதி அளித்தே - கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கையில் பெருவாரி வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்தார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

இப்போது மூன்று மாதங்கள் அல்ல, மூன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. விடுதலைப் புலிகளை அழித்ததன் மூலம், முன்னர் எந்தத் தென்னிலங்கை அரசுத் தலைவரும் பெறாத வரலாற்றுச் சாதனையின் உச்சத்தில் அவர் இப்போது நிற்கின்றார். தென்னிலங்கையில் அவருக்கான ஆதரவும் செல்வாக்கும் இமயத்தைத் தொட்டு நிற்கின்றன. இந்தச் சமயத்தை - சந்தர்ப்பத்தை - வசமாகப் பயன்படுத்தித் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் தீர்வு ஒன்றை அவர் முன்வைப்பாராயின் அதைத் தென்னிலங்கையில் 'சந்தைப்படுத்துவது' அவருக்கு ஒன்றும் கஷ்டமான விடயமாக இருக்க மாட்டாது. அப்படி நடந்துகொண்டு உலக வரலாற்றில் என்றும் பெயர் குறிப்பிடத்தக்க சரித்திர நாயகனாக - உயர்ந்த நாட்டுத் தலைவனாக (Statesman) வருவதிலும் பார்க்க, தமக்குள்ள செல்வாக்கை உடனடியாகப் பயன்படுத்தி அடுத்த எட்டு ஆண்டுகளுக்கு நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தம்மை உறுதிப்படுத்திக் கொள்வதுதான் முக்கியமானது என்று அவர் கருதுகின்றார் போலும்.

நல்லது. அப்படித் தமது அடுத்த எட்டு ஆண்டு காலப் பதவியை - அதிகாரத்தை - உறுதிப்படுத்திய பின்னர், அந்தப் பலமான அத்திவாரத்தில் நின்றுகொண்டு, தமிழர்களுக்கு அதிக விட்டுக்கொடுப்புடன் கூடிய நியாயத் தீர்வைத் தம்மால் வழங்க முடியும் என அவர் கருதவும் கூடும்.

அதாவது, பேரினவாதத்தில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கையை அதிருப்திப்படுத்தியபடி, தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்கி, அந்தத் தீர்வையும் தனது எதிர்காலத்தையும் வீணடிப்பதிலும் பார்க்க, தமது அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, பின்னர் அந்த ஸ்திரத்தோடு நியாயத்தீர்வை வழங்குவது குறித்து ஆராய்வது நல்லது என அவர் எண்ணுகின்றாரோ தெரியவில்லை.

எது எப்படியென்றாலும் தனி அரசியல் தலைமைகளின் நலனுக்காக சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இழுபறிப்பட்டுப் போகவிடப்பட்ட இலங்கைச் சரித்திரம் இப்போது மீண்டும் அதே பாதையில் பயணிக்க முயல்கின்றதோ என்ற சந்தேகத்தைத் தவிர்க்க முடியாது.

# அரச வைத்தியர்களின் அடையாள வேலை நிறுத்தத்தால் குடாநாட்டு ஆஸ்பத்திரிகளும் ஒரு மணிநேரம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

புதிய வைத்திய அதிகாரிகளின் நியமனத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டதைக்கண்டித்து நேற்று காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை குடாநாட்டு வைத்தியர்கள் ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் வைத்திய சேவைகள்ஒரு மணி நேரம் ஸ்தம் பிதம் அடைந்தது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க யாழ். கிளை ஏற்பாடு செய்திருந்தது.

புதிதாக வழங்கப்படவுள்ள வைத்திய அதிகாரிகளுக்கான நியமனத்தில் வடக்கு, கிழக்கு மாகாண வைத்திய சாலைகளும், இடம்பெயர்ந்தோர் முகாம்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து இந்த அடையாள வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் அவசர உயிர் காப்புப் பணிகள் மட்டும் இடம்பெற்றன.

ஏனைய எந்தச் சேவைகளும் இடம் பெறவில்லை.

தனியார் வைத்திய நிலையங்களும்ளிலும் வைத்திய சேவைகள் குறித்த நேரத்தில் ஸ்தம்பித்தே காணப்பட்டன.


குறித்த வேலை நிறுத்த நேரத்திற்குப் பின்னர் குடாநாட்டில் வைத்திய சேவைகள் யாவும் வழமைக்குத் திரும்பின.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கங்கள் நேற்று முழுநாளும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (203-111)

# 'கொன்ரெய்னர்' வாகனம் சரிந்ததில் வர்த்தக நிலையக் கூரைப் பகுதி சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'கென்ரெய்னர்' வாகனம் ஒன்று நிலத்தில் புதைந்து சரிந்தமையால் அந்த வர்த்தக நிலையத்தின் முன்பக்கம் பெரும் சேதம் அடைந்தது.



(படங்கள்: லக்ஸ்மன்)

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சத்திரச் சந்திக்கு அண்மையில் உள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு முன்னால் இடம்பெற்றது.

தென் பகுதியில் இருந்து தரைப் பாதையூடாக பொருள்களை ஏற்றி வந்த 'கென்ரெய்னர்' வாகனம் குறித்த வர்த்தக நிலையத்தில் பொருள்களை இறக்கி கொண்டிருந்த சமயம் திடீரென சரிந்து விபத்துக்குள்ளானது.

'கென்ரெய்னரின்' முன் பகுதி நிலத்தில் புதைந்தமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# யாழ்.ஆஸ்பத்திரியில் கடந்த 6 மாத காலத்தில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையான ஆறு மாத காலப்பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 914 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலையின் புள்ளி விவரங்களில் இருந்து அறியவந்துள்ளது.

இதில் 44 ஆயிரத்து 974 பேர் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதனைவிட ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 940 பேர் வைத்தியசாலையின் வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த ஆறுமாத காலப் பகுதியில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. வெளி நோயாளர்கள் பிரிவு சிகிச்சை நிலையங்களில் கூடுதலான மக்கள் காய்ச்சல், தடிமல், தலைவலி போன்ற பொது நோய்களுக்குச் சிகிச்சை பெற்று சென்றுள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (50-224)

# சுன்னாகம் மீன் சந்தையில் பழுதடைந்த கடலுணவு விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் விசனம்

வலி.வடக்கு, ஜூலை 8

சுன்னாகம் மீன் சந்தையில் பழுதடைந்த மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டுக் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகளவிலான மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்ற போதிலும் தற்போது ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றமையால் மீன் விற்பனையும் குறைவாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு விற்பனை செய்யப்படாத மீன்கள் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்த பின்னர் அடுத்த நாள் அவை மீண்டும் சந்தைகளுக்கு எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. குளிரூட்டியில் வைக்கப்பட்ட மீன்கள் வெளியே எடுக்கப்பட்டதும் பழுதடைந்து விடுகின்றன.

அவற்றை வாங்கி வீட்டிற்குக் கொண்டுசென்று தண்ணீரில் கழுவி மீனை வெட்டத் தொடங்கும்போதே அது பழுதடைதுள்ளமையை நுகர்வோரால் கண்டறிய முடிகின்றது.

இதேவேளை குறிப்பிட்ட மீன் விற்பனையாளர்களிடம் இதனைச் சுட்டிக்காட்டினால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பழுதடைந்த மீன் விற்பனை செய்யப்படுவது குறித்துப் பிரதேச சபை அலுவலர்களும் பொது சுகாதார பரிசோதகர்களும் கவனம் எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். (50-86)

# இந்தியத் தூதுவர் இன்று சாரதா ஆச்சிரமத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் உள்ளிட்ட குழுவினர் இன்று புதன்கிழமை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இன்று முற்பகல் 10.30 மணியளவில் சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ள ஆன்மீக நிகழ்விலும் 'குருபூர்ணிமா' நூல் வெளியீட்டு விழாவிலும் இந்திய தூதுவர் அலோக் பிரசாத், இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் விக்ரம் மிஸ்ரி, பாதுகாப்பு ஆலோசகர் பிரதாப் சிங் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் 'குருபூர்ணிமா' மலரினை தூதுவர் அலோக் பிரசாத் வெள்ளியிட்டு வைக்க முதற் பிரதியை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பெற்றுக்கொள்வார். (50-9)

# இலங்கை வங்கியின் வெளிவாரி ஊழியர்களின் நிரந்தர நியமனம் குறித்து வாக்குறுதி அளிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 8

இலங்கை வங்கியின் வெளிக்கள ஊழியர்களின் நியமனம் தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கை வங்கியின் தலைவர்கலாநிதி காமினி விக்கிரம சிங்க கருத்துக்கள் எதனையும் தெரிவிக் கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் வெளிக்கள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென இலங்கை வங்கித் தலைவர் தெரிவித்ததாக நேற்றைய உதயனின் மூன்றாம் பக்கத்தில் வெளியான செய்தி தவறானதாகும்.

இது தொடர்பாக வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இலங்கை வங்கியில் வெளிக்கள ஊழியர்களது நியமனம் தொடர்பாக உதயனில் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்கும் எமது வங்கிக்கும் உத்தியோகபூர்வமான எதுவித தொடர்பும் இல்லை எனவும், அப்படியான கருத்து எதனையும் வங்கியின் தலைவர் கூறவில்லை எனவும் தெரிவித்தார். தவறுக்கு வருந்துகின்றோம். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 25 | 09.07.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ. 07.01 வரை |
| நட்சத்திரம்: | திருவோணம் |
| | முழுவதும் |
| சுபநேரம்: | 07.28 - 08.58 |
| ராகுகாலம்: | 01.28 - 02.58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தை அரங்கக் குதூகலிப்பு விழா

குழந்தை அரங்கக் குதூகலிப்பு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதில் முகிழ் நிலை ஆசிரிய மாணவர்கள் பங்கு கொள்ளும் சிறுவர் நாடக ஆற்றுகைகள் இடம்பெறும். (1-203)

## 31 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை அழைப்பு



வைகாசிமாதம் 25 ஆம் நாள் (08.06.2009) திங்கட்கிழமை கொழும்பில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

திருமதி

**ஈஸ்வரி விஸ்வநாதன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.07.2009) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு 171/3, W.A. சில்வா மாவத்தையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

விஸ்வநாதன் (கணவர்),
உறவினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் கௌரவ பொதுச் செயலாளரும்,
சமூகத்தொண்டனுமாகிய ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்

**பிலிப்பையா பெனடிக்ற்**

அவர்களின் திடீர் மறைவு அவர் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல கல்வி உலகிற்கும், எம் சங்கத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.
அமரர் சமாதான ஒளியில் ஒளிர எம் உள்ளம் உருகி கண்ணீர் சொரிந்து இயேசுவை இறைஞ்சுகிறோம்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி
பழைய மாணவர்
சங்க நலன்விரும்பிகள்.

இல.59,புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## முறைசாராக்கல்விப் பிரிவு பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஆங்கிலம், கணிப்பொறி திருத்தல் பயிற்சி ஆகியன நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தெரிவித்தார். (1)

## சமாதானக்கல்விச் செயற்பாடு

வண்ணை, ஜூலை 8

'சீப்பீயார்' நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சமாதானக் கல்விச் செயற்பாடுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அச்சுவேலி, தோப்பு அருள்நந்தி பாடசாலையில் நடைபெறவுள்ளன.

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை செயற்பாடுகள் நீடிக்குமெனவும் செயற்திட்ட இணைப்பாளர் செல்வி சோபனா யோகலிங்கம் தெரிவித்தார்.

(1-160)

## போஷாக்குக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 8

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பி.ப. 4 மணிவரை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்து கொள்வர்.

இரத்ததானம் வழங்கும் சேவையும் இடம்பெறவுள்ளது.

(1)

## சட்டமாணி கற்கை நெறி பதிவுகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சட்டமாணி (L.L.B.) கற்கை நெறிக்கான நுழைவுப் பரீட்சையில் தோற்றித் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புதிய பதிவுகள் யாவும் நாளை வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து ஆவணங்களுடனும் சமுகம் தருமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04★04★1921 உதிர்வு 08★06★2009

அமரர் இளையதம்பி கணபதிப்பிள்ளை
(கதிரிப்பிள்ளை)

முந்தி வந்த மலரென்று மெத்தநிதம் முத்தமிட்டு
கண்மணியாய்க் காத்து வந்த தெய்வமே!
சிந்தை மிகக் கனிந்து சிறப்புடனே நாம் வாழ
வேண்டுமுதவி பல செய்தாயே மறப்போமோ
அந்தியத்தே நாமிருந்து ஆனபணி செய்யாத
இப் பாவிநாம் இங்கிருந்து கதறுவதோ?
சந்தையிற் கூட்டமாய் சடுதியாய் மறைந்தாயோ
எம்மையாவே எமக்கு மீண்டும் நிழலாகப் பிறப்பாயோ

உயனை வளவு,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

நினைவுடன்:
குடும்பத்தினர்.

## 2ஆம் வருட நிறைவில்

மண்ணில் 05 ★ 08 ★ 1982



விண்ணில் 08 ★ 07 ★ 2007

செல்வி ஜோன் அன்ரனி ஜெனற் மரியசாந்தி

எம் நெஞ்சமெல்லாம் நிறைந்த
எம்அருமைச் செல்லமே மரியா!
வாழும் காலமெல்லாம் - உன்னைப்
பாசத்தோடு நினைத்திருப்போம்
உன் ஆன்மா நித்திய அமைதி பெற
நிதமும் இறையருள் வேண்டுகின்றோம்.

Mrs. M.G.F.John Antony,
103/20, Mayfield Lane, Kotchena,
Colombo - 13 T.P - 0117200546

என்றும் பாசத்துடன்:
அம்மா, சகோதரங்கள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பூமாதேவி



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பூமாதேவி நேற்று (07.07.2009) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி செல்லையாவின் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அன்பு மனைவியும் ஜயபாலன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கைதடி), கமலினி (ஆசிரியை, யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்), ஜெயரூபன் (ஆசிரியர், யா/நாவற்குழி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம், சின்னத்துரை, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரன் (திலக்சன் பல்பொருள் வாணிபம்), சத்தியரஞ்சனா, சிவகௌரி ஆகியோரின் மாமியும் திலக்சன், கம்சத்வனி, லம்சத்வனி, துளசிகன், டபோதினி, துளசிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2009) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

### முஸ்தபா நிஷ்தார்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முஸ்தபா நிஷ்தார் 05.07.2009 ஞாயிற்றுக்கிழமை சிலாபத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முஸ்தபா - ஆசயாமரியா தம்பதியினரின் மகனும், இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், ஜெனிற்றா, சுஜான், நிரோஷா, மிலானி, நிமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோர்ஸ் ஜோயின் அன்பு மாமனாரும், ஜொனிசனின் பேரனும், பாருக், சுவைதா, மஹறிபா, பௌசியா, மொஹமட் அலி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாயிஸா, லியாகத்அலி, சபுருகான், பாயிஸ், மும்தா, இரத்தினசிங்கம், ஜோன்பிள்ளை, அரியநாயகம், குரூஸ், இராஜசிங்கம், ஞானதாசசிங்கம், லியோரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.07.2009) புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு சிலாபம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


68/2, அளுத்வத்தை,
சிலாபம். தொ.பே. 0779940382

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விஸ்வ குலத்தாள்

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு



தோற்றம்: 17 ★ 02 ★ 1935
மறைவு: 19 ★ 06 ★ 2008

அமரர்
நல்லதம்பி பொன்னுத்துரை
(பத்தர் ஐயா)

4 ஆம் ஆண்டு



தோற்றம்: 28 ★ 10 ★ 1974
மறைவு: 03 ★ 10 ★ 2005

அமரர்
பொன்னுத்துரை சுபேந்திரன்
(ராசன் கண்ணாடி)

ஆண்டவன் அடி சென்ற உங்களை என்றும்
நினைப்போம் தாள் பணிந்தேத்தி

இன்று (08.07.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவு தினக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களால் கைதடி முதியோர் இல்லத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்குள்ள முதியோர்களுக்கு விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

நிகழ்வில் ஆசிரிய கலாசாலை சமூகத்தினர் சிரமதானப் பணியில் ஈடுபடுவதையும், முதியோர்கள் பலூன் உடைக்கும் விளையாட்டுப் போட்டிக்குத் தயாராகுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:நந்தன்)*

## நவாலி விவசாயிகள் சம்மேளனம் இரு அலகுகளாகப் பிரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

நவாலி விவசாயிகள் சம்மேளனம் இரு அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 வருடங்களுக்குப் பின்னர் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் தெரிவித்தார்.

நவாலி வடக்குப் பிரிவிற்கெனத் தனியான ஒரு விவசாய சம்மேளனமும் நவாலி கிழக்கு - தெற்குக்கென பிறிதொரு விவசாய சம்மேளனமும் உருவாக்கப்பட்டுள்ளன.

நவாலி விவசாயிகள் சம்மேளனம் இரு அலகுகளாகப் பிரிப்பதற்கான அனுமதியை கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் வழங்கியிருந்தார். (203)

## மக்களுக்கு எந்த நேரத்தில் எது தேவையோ அதை நிறைவேற்றுவதற்கு பாடுபடுகின்றேன்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம்,ஜூலை 8

மக்களுக்காகப் பதினைந்து வருடங்கள் ஆயுதப் போராட்டத்திலும் 20 வருடங்களுக்கும் மேலாக ஜனநாயக வழியிலும் செயற்பட்டு மக்களுக்கு எந்த நேரத்தில் எது தேவையோ அதை நிறைவேற்றப் பாடுபடுகின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

வலி.மேற்குப் பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

நம்பிக்கைதான் வாழ்க்கை, அந்த வகையில் நீங்கள் நம்பிக்கையைக் கைவிட வேண்டாம். இது எங்களுடைய தேசம், எங்களுடைய அரசு என்ற வகையில் நமது எதிர்காலம் சுபீட்சமடைய ஒரே அணியில் திரளவேண்டும்.

மக்கள் மேலும் ஒத்துழைத்தால் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் -என்றார்.

இந்த நிகழ்வில் நலிவுற்ற குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், நுளம்பு வலைகள் வழங்கப்பட்டதுடன் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்குக் கோழிக்கூடுகளும் 20 கோழிக்குஞ்சுகளும், உபகரணங்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டன.

இதேவேளை சங்கானை கலாசார மண்டபத்தினைப் புனரமைக்க 20 மில்லியன் ரூபா தேவை என்றும் பிரதேச செயலரினால் அமைச்சரிடம் கோரிக்கை விடப்பட்டது. (6-29)

## பற்றைகளினால் மூடப்பட்டிருக்கும் மீசாலை வடக்கு வேம்பிராய் மயானம்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

மீசாலை வடக்கு வேம்பிராய் மயானம் பற்றைகளால் மூடப்பட்டு பொதுமக்கள் பாவனைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது.

மயானத்திற்கு செல்லும் பாதை நாயுருவிப் பற்றைகளால் மூடப்பட்டு ஒற்றையடிப் பாதையாக மாறியுள்ளது.

இதனால் சடலத்தை தூக்கிச் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மட்டுவில் கிழக்கு, மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு, கல்வயல், மண்டுவில், மீசாலை மேற்கு, மீசாலை வடக்கு, வேம்பிராய், மந்துவில் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இந்த மயானத்தைப் புனரமைத்து தருவார்களா என்று மக்கள் கோரியுள்ளனர். (203-207)

## அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய 30 இற்கு மேற்பட்டோருக்கு அபராதம்

### சுன்னாகம் பொலிஸாரால் விதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 8

வாகன அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சுமார் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் சுன்னாகம் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

சுன்னாகம் பிரதான வீதியில் வாகனங்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு இருந்தார்கள்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை சாரதிகள், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பௌசர் சாரதிகள் உட்பட மற்றும் வாகனங்களின் சாரதிகள் பலரும் பிடிபட்டு உரிய தண்டப் பணம் செலுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

சுன்னாகம் பொலிசார் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதியில் விபத்துக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து காணப்படுகின்றதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். (203)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, ஜூலை 8

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம்வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம் பெறும். (203-236)

## பெண்களுடன் சேஷ்டை புரியும் இளைஞர்களை சுன்னாகம் பொலிஸார் பிடித்து எச்சரித்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 8

உடுவில், மல்லாகம் பகுதியில் வீதியில் நின்று பெண்களுடன் தகாத சேஷ்டைகள் மற்றும் வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் சுன்னாகம் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

இளைஞர்களின் அட்டகாசம் தாங்க முடியாமல் இந்தப் பகுதி மக்கள் சுன்னாகம் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து சுன்னாகம் பொலில் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே குறிப்பிட்ட இளைஞர்களை பிடித்து எச்சரிக்கை செய்த பின்னர் விடுவித்தனர்.

இளைஞர்கள் கூடி நின்று அட்டகாசம் செய்யும் இடத்திற்குத் திடீரென வாகனத்தில் சென்று இளைஞர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்து எச்சரித்ததுடன் அப்பகுதி மக்களுக்கும் இவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் தெரிவித்தனர்.

பிடிக்கப்பட்ட இளைஞர்கள் பின்னர் கிராம அலுவலர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர். (50)

## ஆனைக்கோட்டையில் மீன்சந்தை அமைக்க ஏற்றவகையில் காணி பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஆனைக்கோட்டையில் மாலைநேர மீன்சந்தை ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் விரைவில் பொருத்தமான காணி அல்லது கட்டடங்களுடன் கூடிய காணி மானிப்பாய் பிரதேச சபைக்குப் பெற்றுக்கொடுக்க மக்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச ஆலோசனை சபை உறுப்பினர் யெ.பெ. அருமைநாயகம் மாஸ்டர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நீண்ட காலமாக ஆனைக்கோட்டை மீன்சந்தை பல தடவைகள் இடம்மாறியுள்ளது.

பொருத்தமான இடமின்மையால் மீன் விற்போரும்-மீன் வாங்குவோரும் மிகக் கஷ்டமுறுகின்றனர்.

இந் நிலையினைப் போக்க மானிப்பாய்ப் பிரதேச சபைக்கு மாலை நேர மீன் சந்தை அமைய பொருத்தமான இடத்தினை அனைவரது ஒத்துழைப்புடன் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

வடக்கின் வசந்தம் திட்டங்கள் நிறைவேறும் காலத்திற்குள் அதனைப் பெற்றுக் கொடுத்தால் அபிவிருத்தியைச் சுலபமாக மேற்கொள்ளலாம் என ஆலோசனை சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (203)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை விடுதிகளில் தங்கியுள்ள அகதிகள் தென்மராட்சிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விடுதிகளில் இயங்கும் நலன்புரி நிலைய மக்கள் விரைவில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையத்திற்கு மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்.செயலகத்தினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அநேகமாக இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆசிரியர் கலாசாலை விடுதிகளில் தங்கி கல்வி பயில உள்ள ஆசிரிய மாணவர்களின் தேவைகருதி விடுதிகளைக் கையளிக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளதால் இன்னும் மூன்று வாரங்களில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை நலன்புரி நிலையம் மூடப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (50-207)

## பேரார்வத்தைத் தூண்டும் நூல்களை மாணவர்கள் தினமும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.விஜயகுமாரன் கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 8

மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குத் தமக்கென ஓர் இலட்சியத்தை உருவாக்கி அதனை அடையும் வரை விடா முயற்சியுடனும், ஒழுக்கத்துடனும் செயற்பட வேண்டும். மாணவர்கள் தமது இளமைப் பருவத்திலே பேரார்வத்தைத் தூண்டுகின்ற நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். ஆவலை வீணடிக்கும் சக்திகளில் தங்களது காலத்தை, ஆற்றலை சம்பந்தப்பட அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.விஜயகுமாரன்.

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர் தர மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் எமது உடல் எவ்வாறு களைப்படைகின்றதோ அதே போன்று எமது மனமும் தொடர்ச்சியான செயற்பாடு சிந்தனை காரணமாகக் களைப்படைந்து சோர்வடைகின்றது. எனவே நாம் மனதுக்குப் போசாக்கு வழங்கி உற்சாக மூட்டுகின்ற நல்ல நூல்களைத் தினமும் வாசிக்க வேண்டும். சிலருடன் உரையாடுவதிலிருந்தும் சில நல்ல நூல்களைப் படிப்பதிலிருந்தும் நாம் அகத்தூண்டுதல் பெற முடியும். நமது கண்ணுக்குத் தெரிகின்ற அல்லது நம்கையில் இருக்கின்ற ஏதோ ஒன்றிலிருந்து நமது செயலுக்கான தூண்டுதலை நாம் பெறவேண்டும்.

ஒருவரது செயற்றிறனானது அவரது ஆற்றலில் மட்டுமன்றி அவருக்கு கிடைக்கும் ஊக்கப்படுத்தலிலும் தங்கியுள்ளது. எவ்வளவுதான் ஆற்றல் இருந்தாலும், போதிய ஊக்கப்படுத்தல் கிடைக்காவிட்டால் செயற்றிறனானது தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்லும்.

இந்திய முன்னாள் ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியுமாகிய அப்துல்கலாம் திருக்குறள், பகவத்கீதை போன்ற நூல்களே தன்னை ஊக்கப்படுத்தி [illegible] கூறுகின்றார். அதிக சந்தோசத்திலோ அல்லது துக்கத்திலோ மூழ்கிவிடாமல் மன உறுதியுடன் இலட்சியத்தை நோக்கிச் செல்வதற்கு இந்த நூல்களே உறுதுணையாக இருந்தன என்று அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடங்களை கற்பிப்பதற்கு மேலாக அவர்கள் தாங்களாகவே கற்றல் செயற்பாட்டில் நாட்டம் கொள்ளத்தக்க வகையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் சிலவேளைகளில் தமது ஆற்றல்களை அறியாதவர்களாக இருக்கின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களது ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் ஊக்கப்படுத்தி, வழிப்படுத்தும் போது மாணவர்களது வாழ்க்கையில் ஒரு பாரிய திருப்பு முனையாக அது அமையும். இம்மாணவர்கள் தம்மை நெறிப்படுத்திய, தமது ஆற்றலைத் தாமே அறியத் செய்த ஆசிரியர்களை தமது வாழ்நாளில் என்றுமே மறக்கமாட்டார்கள், தமது வாழ்க்கையின் ஒவ்வொரு முன்னேற்றப் படிகளிலும் காலடி எடுத்து வைக்கும் போது தமது ஆசிரியர்களை [illegible]யுடன் நினைத்துக் கொள்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (04- 55)

## பாகற்காய் திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டான்

யாழ்ப்பாணம், ஜூலை 8

பாகல் பயிர் செய்கைத் தோட்டங்களில் பாவற்காய்களை அபகரித்த திருடர்களில் ஒருவர் தோட்ட உரிமையாளர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 2 ஆம் திகதி இரவு 9.30 மணிக்குக் கல்வயல் விளைவேலி தோட்டத்தில் இடம்பெற்றது.

இரவு மழை பெய்தபோது தோட்டத்தில் வைக்கப்பட்ட நீரிறைக்கும் இயந்திரத்தை மூடுவதற்குச் சென்ற தோட்டச் செய்கையாளர் அங்கு திருட்டு நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டதை அவதானித்து கையடக்கத் தொலைபேசி மூலம் அருகில் உள்ள தோட்ட உரிமையாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அவர்கள் தோட்டப் பகுதியைச் சுற்றிவளைத்தபோது நால்வர் தப்பியோடி விட்டதாகவும் ஒருவரை துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகில் வைத்து மடக்கிப் பிடித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் 'கிராமத்திற்கு ஒரு பயிர்' எனும் செயற்றிட்டத்தில் விளைவேலி கிராமம் 'பாகல்' பயிர் செய்கைக்குத் தெரிவு செய்யப்பட்டு செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை8

யாழ்.திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா நாளை வியாழக்கிழமையும், தேர்த்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும் தீர்த்தத் திருவிழா சனிக்கிழமை காலை 8 மணிக்கும் இடம்பெறும். (204)

* * *

தெல்லிப்பழை கிழக்கு, குருநாத சுவாமி ஆலய அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

அளவெட்டி வடக்கு, அரசடி தம்பயப்புலம் ஆதி பராசக்தி ஆலய கும்பாபிஷேக நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.48 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (204)

* * *

சிறுப்பிட்டி வடக்கு, ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (204-72)

* * *

பனிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.


எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-29)

## மல்லாகம் கோட்டைக்காடு அருள்மிகு சாளம்பை


# முருகமூர்த்தி தேவஸ்தானம்
# பத்தாம் ஆண்டு
# தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

காலம் : 08.07.2009
புதன்கிழமை
நேரம் : முற்பகல் 10.30 மணி

அடியார்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.



சாளம்பை முருகனுடன்


ஆறுமுகம் இராசு ஜெயக்கொடி ஜனார்த்தனன் ஜெயக்கொடி சஞ்சீவன்

கோட்டைக்காடு, மல்லாகம். தேர்த் திருவிழா உபயகாரர்கள்.

(86816)

## ஆனைக்கோட்டை வித்தியாசாலையின் சாதனைகள்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அண்மையில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வலய மட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இதேவேளை தனி இசைப்போட்டியில் இப்பாடசாலையின் இரு மாணவர்கள் இரண்டாம்இடத்தையும் பெற்றுள்ளனர். (201-100)

## 3ஆம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 11 . 10 . 1977



உதிர்வு 11 . 07 . 2006

### அமரர் தர்மலிங்கம் ரதீஸ்குமார் (குமார்)


செல்வச் சிறப்போடு இன்ப வாழ்வு
வாழ்வோமென நாம் எண்ணியிருந்தோம்
துன்பச் சுமையைத் தந்து விட்டு தூரதேசம் சென்றாயோ!
கண் கலங்க வைத்த எம் அன்புச் செல்வம்
அந்தோ உன் பிரிவு தாங்க முடியவில்லை
உம் திருமுகத்தைக் காண ஒரு முறை வாராயோ!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"தர்சி வீடியோ அன் போட்டோ",
சிவஸ்தான், பிறவளவு
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(86815)

## கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து
அவர்களின்
## இருபதாவது ஆண்டு நினைவு தினம்



மண்ணரங்கில்: 11.02.1924 விண்ணரங்கில்: 08.07.1989

வானொலியில் உந்தன் கீதமிசைக்கையில்
வானுமுருகுமையா- அந்தத்
தேனிசை கேட்பவர் வானமுதுண்பரோ
தெய்வீகக் கானமையா.

"சாரங்கா", காங்கேசன்துறை.

பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,பேறாமக்கள்.

(86819)


# Trinity College And University
(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

*யாழ் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களது நன்மை கருதி யாழ்ப்பாணத்திலும் எமது பட்டப்படிப்புக்கள் அனைத்தையும் தற்போது ஆரம்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.*

**Bachelors Degree :-**
- **Bachelor of ICT (B.ICT)** ( Three Years + ICT Training)
- **Bachelor of Business IT (B.B.IT)** (Two Years +Training)
- **Bachelor of Business Management (BBM)** (Two Years +Training)
- **Bachelor of Commerce (B.Com)** (Two Years +Training)
- **Bachelor of International Business (B.IB)** (Two Years +Training)
- **Bachelor of Computer Science - B.Sc (Hons)** (Two Years +ICT Training)

**Masters Degree :-**
- **Master of ICT (MICT)** (1 ½ Years + Project Training)
- **Master of Science (IT) (M.Sc in IT)** (1 ½ Years + Project Training)
- **Master of Commerce (M.Com)** (1 ½ Years + Project Training)

அனுமதி விண்ணப்ப படிவங்களை இன்று முதல் எமது யாழ் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.




O/L அல்லது A/L பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.

எமது பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரமுள்ள இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் படிப்பை தொடரமுடியும்

வகுப்புக்கள் யாவும் வார மற்றும் வார இறுதிநாட்களில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் முதற் பிரிவு ஆரம்பம் 14/07/09

✓ அனைத்து வருடப் பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
✓ யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே எமது பட்டப் படிப்பை நிறைவு செய்தபின்னர் UKயில் உள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப் பின்படிப்பை (M.Sc,MBA) தொடர முடியும் இதற்கான VISA + PART TIME JOB ஏற்பாடுகள் யாவும் எமது பல்கலைக்கழக நிர்வாகத்தால் செய்து தரப்படும்.

**Trinity University Affiliations...**
- Part Of The Educational Division Of The U.I.C - USA
- Registered with British (U.K) Education Department (As bonafide legal overseas qualifications by the UK education act of parliament - 1988)
- Registered with Correspondence Accreditation Association (CAA - V140PG330)
- Trinity does have a Accredation certificate JPA(L) 130/10/2-Klt.128. Recognized by UNESCO.
- Member of the United Interdenominationl Church



Please Contact Our Degree Course Advisor :-
Rev.Fr.A.B.Vincent Omi
Mobile:- 077 - 9237630

மானிப்பாயில் எமது பட்டப்படிப்பை நீங்கள் கற்பதற்கு நாடவேண்டிய நிறுவனம்


**UNI**
ICT Education Trainers
Jaffna Road, Manipay.
T.P No :- 060 - 221 - 6433 / 0777 - 110862

யாழ்ப்பாணத்தில் எமது பட்டப்படிப்பை நீங்கள் கற்பதற்கு நாடவேண்டிய நிறுவனம்:-

**CATWAS.COM**
Computer Academy
#26,Somasundram Avenue, Chundikuli,Jaffna.
T.P No :- 021 - 222 - 3805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராஹிபுரம் - கொக்குவில் மேற்கு
# அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் தேவஸ்தானம்
# திருக்குடமுழுக்கு விழா



## அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய வரலாறு

நமது தெய்வ வழிபாடுகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது சக்தி வழிபாடாகும். சக்தி பல திருவுருவங்களையும் பல திருநாமங் களையும் தாங்கி இப்புவியில் வழிபடப்படுகிறாள். நாம் இன்று மிக எளிதில் வணங்கி திருவருள் பெற்று உய்யக்கூடிய அதி அருள்வாய்ந்த பேரருட்சக்தி நிறைந்த தெய்வம் ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆவாள். ஸ்ரீ வாராஹி என்ற திருநாமமானது தன் பேரன்பால் உலக உயிர்களை வசப்படுத்துபவள் என்று பொருளாகும்.

1915ஆம் ஆண்டிலிருந்து நமது திருநாடாம் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் மேற்குப் பதியில் ஸ்ரீ வாராஹி அம்பாள் தனி ஆலயத்தில் எழுந்தருளி அன்பர்க்கு அருள் புரிந்து வருகிறாள். புண்ணிய பூமியாம் பாரத நாட்டில் உள்ள வாரணாசியில் [ காசியில் ] பூமி மட்டத்திற்குக் கீழ், சுமார் 30 அடி ஆழத்தில் ஆதி வாராஹியாக அமர்ந்து அருளாட்சி செய்து வருகிறாள். தமிழகத்தின் கலைநயம் மிக்கதும் பெரியகோயில் என அனைவராலும் போற்றப்படுவதும் மன்னன் ராஜராஜசோழனால் 1001ஆம் ஆண்டு அமைக்கப்பெற் றதுமான புகழ்மிக்க தஞ்சைப் பெரிய பிரகதீஸ்வரர் ஆலயத்தில் அம்பாள் ஸ்ரீ வாராஹிக்கு என தனிச் சந்நிதானம் உண்டு. இங்கு ஸ்ரீ வாராஹி அம்பாளுக்கு அமாவாசை, பஞ்சமி, அட்டமி, நவமி ஆகிய திதிகளில் சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன. சப்த மாதர்களில் ஒருவராகத் திகழும் வாராஹித் தாய் சிவாலயங்களில் அன்னை பராசக்தி வடிவமாக வழிபடப்படுகின்றாள்.

சாளுக்கியர் காலத்தில் பழைய மன்னர்கள் வெற்றிவேண்டி அன்னை ஸ்ரீ வாராஹியை வேண்டி வழிபட்டு போரில் மாபெரும் வெற்றியீட்டினார்கள். இதற்கு மன்னன் ராஜராஜ சோழனால் நிறுவப்பட்ட தஞ்சைப் பெரிய கோயிலே எடுத்துக்காட்டாகும். அம்பா ளுக்கென்று தனிச்சந்நிதி வட இந்தியாவில் நேபாளத்தில் பொக்காரா என்ற இடத்தில் ஏரியின் நடுவில் ஒரு தீவுக்குள் அமைந்துள்ளது. படகில் சென்று மக்கள் வழிபட்டு வருகிறார்கள். அதேபோன்று தென்னிந்தியாவில் காஞ்சிபுரம் சாலையில் பன்னூர் எனும் சிற்றூரில் அன்னையின் ஆலயம் உள்ளது. விழுப்புரத்தில் அன்னை ஸ்ரீ வாராஹிக்குப் பெரிய நிலப்பரப்பில் ஆலயம் அமைக்கும் பணியில் அன்பர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

அன்னை ஸ்ரீ வாராஹி வெற்றிக்கு வழிகாட்டும் தெய்வம். அவளது திருவுருவம், பன்றியின் திருவடிவ முகமும் அழகிய பெண் உடல் அமைப்பும் கொண்டதாகும். வாராஹம் என்பதற்குப் பன்றி என்பதே பொருளாகும். நம் சைவசமயத்தில் சிவன், பராசக்தி, விஷ்ணு ஆகிய தெய்வங்கள் பன்றி உருவெடுத்து அருள் புரிந்தமை புராண வரலாறாகும். பரமேஸ்வரன் தாய்ப் பன்றியாக உருவெடுத்துத் தாயைப் பிரிந்த பன்றிக்குட்டிகளுக்குப் பால் அருளியமை நாமறிந்ததே.

இறைவன் அடிதேடி பராசக்தியை வேண்டி விஷ்ணு பன்றி உருவெடுத்து பூமியை அகழ்ந்து சென்றதும் நாமறிந்ததே. உலக ஜீவராசி கள் பூதேவிக்கு ஆபத்து வந்து கதறிய சமயம் அம்பாள் பன்றி உருவெடுத்து பற்களிடையே பூமியைத் தாங்கி காத்த வரலாறும் தெரிந்ததே.

ஸ்ரீ வாராஹிக்கு பலவித நாமங்கள் உண்டு. ஆதிவாராஹி, மஹா வாராஹி, வர்த்தனி வாராஹி, ஸ்வப்பன வாராஹி, அச்வாரூடா வாராஹி, உன்மத்தவாராஹி, சிம்ஹரூடா வாராஹி, மஹிசாரூடா வாராஹி என அழைக்கப்படுகிறாள். அன்னை பல்வேறு வாகனங்களில் அமர்ந்தவளாகத் தியானிக்கப்படுகிறாள். மகிஷம், சிம்மம், வெண்குதிரை, புலி அவளது வாகனங்களாகும். எல்லாத் தெய்வங்களுக்கும் அபயம், வரதம், வலம் இடமாக திருக் கைகளில் உள்ளது. ஆனால் அம்பாள் ஸ்ரீ வாராஹிக்கோ அபயம் இடத்திருக்கையிலும் வரதம் வலத்திருக்கையி லும் அமைந்துள்ளது. ஒரு விஷேட சிறப்பம்சமாகும்.

அன்னை ஸ்ரீ வாராஹி தன்மீது அளப்பரிய பக்தி கொண்டு வணங்கி வழிபட்டு வந்த திரு.சுப்பர் சின்னையா அவர்களது கனவில் தோன்றி தனக்கோர் ஆலயம் அமைக்குமாறு விடுத்த திருக்கட்டளைக்குத் தலை வணங்கி 1915ஆம் ஆண்டளவில் இவ்வாலயத்தை அமைத்தார்.

இவ்வாலயம் அமைந்துள்ள காணி திரு.சுப்பர் சின்னையா அவர்களது சகோதரர் திரு.சுப்பர் காசிப்பிள்ளை அவர்களால் அம்பாளுக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டதாகும். ஆலய ஆரம்பகாலத்தில் அன்னையின் திருவுருவ அமைப்புப் பற்றிய விவரங்கள் அறியமுடியாத காரணத்தால் ஸ்ரீ மீனாட்சி அம்பாளை மூலமூர்த்தியாக அமைத்து ஸ்ரீ வாராஹி என்ற நாமத்துடன் வழிபடப்பட்டு வந்தது. ஆலயமும் ஸ்ரீ வாராஹி கோயில் என்றே அழைக்கப்பட்டது. அலங்கார உற்சவங்களுடன் 1951ஆம் ஆண்டு வரை திரு.சுப்பர் சின்னையா அவர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

அவரது மறைவின் பின் அவருக்கு மகப்பேறற்ற காரணத்தால் அவரது சகோதரர் திரு.சுப்பர் முத்தையா அவர்களது மகன் திருமார்க்கண்டு ஆலயத்தை 1985ஆம் ஆண்டு வரை சிறப்புற நடத்தி வந்தார். அவரது காலத்தில் 1977ஆம் ஆண்டு திரு.முத்தையா மார்க்கண்டு அவர்களின் மருமகன் சுப்பையா நல்லையா அவர்களது தலைமையில் தேவஸ்தான புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அக்கட்டத்தில் ஸ்ரீ வாராஹியின் திருவுருவ அமைப்பு தென்னிந்தியாவில் இருந்து ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் [ நாவலர் வீதியை வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர் ] அவர்கள் பேருதவியால் பெறப்பட்டு மூலமூர்த்தியாகவும் எழுந்தருளியாகவும் திருவடிவம் அமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஆலய ஆரம்பகாலத்திலிருந்தே வழிபட்டுவந்து சுற்றுப் பிரகார மூர்த்திகளாகிய விநாயகர், சந்தானகோபாலர், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான், வைரவர், சண்டேஸ்வரி ஆகிய சுற்று ஆலயங்களுடன் அன்னை ஸ்ரீ மீனாட்சிக்கும் 1977ஆம் ஆண்டு வெளிப்பிரகாரத்தில் ஆல யம் அமைக்கப்பட்டது.

அத்துடன் ஆதிதொட்டே உள் பிரகாரத்தில் இருந்த காளித்தாய்க்கும் வெளிப்பிரகாரத்தில் ஆலயம் அமைக் கப்பட்டது.

1985ஆம் ஆண்டு முதல் திருமதி செல்லமணி மார்க்கண்டு அவர்களும் அவர்களது ஏக புத்திரன் மார்க்கண்டு பரமேஸ்வரன் அவர்களும் ஆலய நிர்வாகத்தை ஏற்றுச் சிறப்புற நடத்தத் தொடங்கினர். ஆலயம் வருடாந்த அலங்கார உற்சவங்களில் இருந்து மாற்றம் அடையத் தொடங்கியது. 1985ஆம் ஆண்டு புதிய கொடிமரம், புதிய சப்பறம் அமைக்கப்பட்டு, கொடி ஏற்றம், சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என விரிவ டைந்து மகோற்சவம் நடைபெறத் தொடங்கியது.

1989ஆம் ஆண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. 1990ஆம் ஆண்டு கட்டுத் தேரில் பவனி வந்த அம்பாள் தன் அடியார்கள் காணிக்கை யால் ஸ்தபதி சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆசாரியார் அவர்கள் கைவண்ணத்தில் அமையப்பெற்ற அழகிய சித்திரத் தேரில் தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் திருவுலா வரத் தொடங்கினாள். வருடந்தோறும் வரும் தமிழ் சித்திரைப் புத்தாண்டை ஒட்டியே மகோற்சவம் ஆரம்பமாகிப் புத்தாண்டில் தேர்த்திருவிழா நடைபெறுவது வழமையாகியுள்ளது.

வருடாந்தம் வரும் தைப்பூசம்,மகாசிவராத்திரி, பங்குனித் திருக்குளிர்த்தி, வைகாசி விசாகம், ஆனிப்பொங்கல், நவராத் திரி, ஐப்பசி வெள்ளி, கேதாரகௌரி விரதம், கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபம் திருவெம்பாவை முதலிய உற்சவங்கள் சிறப்புற நடைபெறுகின்றன. ஆலய பிரதம குரு பிரதிஷ்டா கலாசாகரம், சிவாகம கிரியாஜோதி, சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள் நீண்டகாலமாகப் பணியாற்றி வருகிறார்.

தென்னிந்தியாவில் சென்னையில் விழுப்புரத்தில் ஸ்ரீவாராஹி வாக்குபீடம் உள்ளது. ஸ்ரீ ஸ்ரீ மகேஸ்ராம் என்பவரால் நடத்தப்பட்டு வருகின்றது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் ஸ்ரீ சுந்தரேசசர்மா என்பவரால் அம்பாள் மேல் பாடப்பட்ட ஸ்ரீவாராஹி மாலை யின் மீதிப் பாடல்களும் ஸ்ரீ வாராஹி அந்தாதியும் ஓலைச்சுவடியில் அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்டு ஸ்ரீ வாராஹி அருட்பாமாலையாக புத்தக உருவில் வெளிவந்துள்ளது. தொல்பொருள் ஆராய்ச் சியின் பொருட்டு கண்டறியப்பட்ட வேத ஓலைச்சுவடியில் வடுக பைரவரே அன்னையின் திருக்கணவராகவும் கண்டறியப்பட்டுள்ளார்.

ஆலய ஸ்தாபகர் திரு.சுப்பர் சின்னையா அவர்களது வேண்டுகோளின்படி வழிவழியாக அவர் வம்சத்தினரே ஆலய நிர்வாகப் பெறுப்பேற்றுச் சிறப்புற நடத்தி வருகின்றனர். அருள்மிகு தெய்வமாம் ஸ்ரீ வராாஹி அன்னையின் திருவருட்படி 2009ஆம் ஆண்டு விரோதி வருடத்தில் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று மகாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவேண்டுமென்று அன்பர்கள் முன் வந்துள்ளார்கள். தேவியின் திருக்குடமுழுக்கு விழா இனிதே நிறைவேற அவளருளே துணை!

மங்களகரமான விரோதி வருடம் ஆனித் திங்கள் 25ஆம் நாள் [09.07.2009] வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

ஓம் சக்தியே! ஸ்ரீவாராஹியே போற்றி போற்றி!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
ஓம் சக்தி! ஓம் வாராஹி!

ஆக்கம்:
திருமதி இந்திராணி நல்லையா
"வெண்மதி",
ஆனைக்கோட்டை
ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய வம்சாவழியினர்.

### அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய ஸ்தாபகர்



திரு.சுப்பர் சின்னையா

### திரு.சின்னையா அவர்களது வம்சாவழி முகாமையாளர்கள்



திரு.முத்தையா மார்க்கண்டு



திருமதி செல்லமணி மார்க்கண்டு



திரு.மார்க்கண்டு பரமேஸ்வரன்


## ஸ்ரீ வாராஹியின் அருள்வேண்டி நிற்கும்:


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆல்பிலோன் [illegible] இல. 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | பெஷன் ஹவுஸ் இல.203, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | சாந்தி புடைவையகம் இல.157, 158, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | கதிரவன் நகையகம் இல.188N, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | கிருபா லேனர்ஸ் இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | சிற்றி எலக்ரிக்கல்ஸ் இல. 47, 49, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| நொதன்ஸ் என்றபிறைசஸ் பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். | லிங்கம் ஸ்ரோர்ஸ் இல. 603, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். | கஜமுகன் ஹாட்வெயர் இல. 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | லிங்கன் கிறீம் ஹவுஸ் இல. 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | H.N.B. Assurance யாழ்ப்பாண முகாமையாளர்களும் ஊழியர்களும். | பூபதி பாண் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. |
| சிவானுஷன் கேபில் விஷன் ஆதித்தியா மல்ரி சென்ரர் புது வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம். | வேணி களஞ்சியம் இல. 165, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | அன்னை நாகா பூட் சிற்றி இல. 175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | பூபாலசிங்கம் புத்தகசாலை இல. 4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாண றேடர்ஸ் இல. 336, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | வேல் மிக்சர் கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| சுந்தர் ஸ்ரோர்ஸ் கேணியடி, கொக்குவில். | கணேஷன் ஸ்ரோர்ஸ் இல. 201, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | சீமாட்டி புடைவையகம் [illegible] யாழ்ப்பாணம். | மகாநதி நகையகம் [illegible] கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | அன்னை புத்தகசாலை இல. 7, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | பிடாரி களஞ்சியம் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்

தொகுப்பு: ஔண்யன்

## "சிறியதொகைப் பணத்திற்காக எங்கள் முதுசொம்களை நாங்களே விற்கலாமா?"



'கிராம போன்' என்றால் உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஏதோ புதிய வகைத் தொலைபேசியோ எனவும் சிலர் எண்ணக்கூடும். உண்மையில் மேற்கத்தையவரின் மூலம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு நமது முந்திய தலைமுறையிடையே இசைப் பாடல்களைக் கேட்க உதவிய கருவியே கிராமபோன். 'ரெக்கோர்ட்' எனப்படும் பாடல்கள் பதிவு செய்யப்பட்ட இசைத்தட்டை கிராமபோன் கருவியில் பொருத்தி, கிராமபோனிலுள்ள 'ஊசியை' இசைத் தட்டின்மேல் சீராக நிறுத்தவேண்டும். அதன்பின் கிராமபோன் கருவிக்கு ஆர்மூடுகல் [வைன்] செய்யவேண்டும். அப்போது இசைத்தட்டு சுழல ஆரம்பித்து அந்த அதிர்வினை இன்னிசையாக ஊசியின் ஊடே வெளிப்படுத்தும். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் விசேட வைபவங்களை சிறப்பிக்க கிராம போனில் பாடல்களை ஒலிக்க விடுவதே வழக்கமாக இருந்தது. படத்தில் ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் பூர்த்திசெய்துள்ள கிராமபோன் கருவியை இன்றும் இயங்கவைத்து அதனூடே பரவும் இன்னிசையை ரசித்தபடி இருக்கிறார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா கதிரவேலுஐயா என்ற 74 வயது முதியவர்.

[படமும் தகவலும்:- நந்தன்]

தானியங்களை அரைத்து மாவாக்குவதற்கு இன்றைக்கு இயந்திரங்களை நம்பியிருக்கவேண்டிய நிலை. ஆனால், பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் திரிகை எனப்படும் கருவி தானியங்களை மாவாக்குவதற்கு எமது முன்னோரிடையே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. கருங்கற்களைக் கொண்டு வட்ட வடிவில் அமைக்கப்பட்ட இரண்டு சுழலிகள் அதன் நடுவில் பொருத்தப்பட்ட அச்சின் துணையோடு ஒரு சீரான அசைவை ஏற்படுத்தும் பொறிமுறையை திரிகை கொண்டுள்ளது. எனவே இதன் அச்சுப் பகுதியை அண்மித்திருக்கும் துவாரத்தின் ஊடாக தானியங்களை இட்டு மேலுள்ள சுழலியைமனித வலுக்கொண்டு இயங்கவைப்பதன் ஊடாக மாவைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இயந்திரங்களின் இரைச்சலாலும் அவற்றிலிருந்து வெளியேறும் புகையாலும் சூழல் மாசடையும் தன்மை திரிகை போன்ற முன்னோரின் கருவிகளில் அறவே கிடையாது.


(படமும் - நந்தன். தகவல் - தொல்புரம் நாகேஸ்வரன் )





சுன்னாகம் கந்தரோடை வீதியிலுள்ள ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தில் வாசலில் வேப்பமரமும் அரச மரமும் ஒன்றை ஒன்று தழுவியவாறு வளர்ந்துள்ளன. இந்த இணைபிரியாத இரு மரங்களிடையே பிள்ளையார் உருவத்தை ஒத்த தன்மைகொண்ட உருவமொன்று மரத்தில் தோன்றியுள்ளதாக அண்மையில் வெளியான செய்திகளால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சித்திரைப் புத்தாண்டுத் தினமன்று இந்தப் பிள்ளையார் சிலை தோன்றத் தொடங்கியதாகவும் இப்போது வெகு வேகமாக அந்த உருவம் வளர்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது. அரச மரத்தில் 10 அடி உயரத்தில் வளர்ந்துள்ள இந்த பிள்ளையார் உருவத்தைத் தரிசித்து அருள் பெறவென தினமும் இப்பகுதியை நோக்கி பக்தர்கள் படையெடுத்து வருகின்றனர். (படமும் தகவலும் :- நேசன்)

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களின் வரிசையில் மிக முக்கிய இடத்தைப் பெறும் "மாட்டு வண்டிச் சவாரி" நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், இதில் கலந்து கொண்ட மாடுகளும் அவற்றை இயக்குவோரும் தமது அணியே வெற்றி அணியாக வேண்டும் என்ற துடிப்புடன் வேகமாகச் செல்ல முற்படுவதையும் படம் தத்ரூபமாகக் காட்டிநிற்கின்றது. இது அண்மையில் நீர்வேலி சவாரித்திடலில் மாடுகள் வெற்றி இலக்கை நோக்கி வேகமுடன் பாய்ந்து ஓடும்போது 'கிளிக்' செய்யப்பட்டது. (படமும், தகவலும்:- கலைஞன்)





(நன்றி:நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

1900 இற்கும்1920 இற்குமிடையில் செதுக்கப்பட்ட வட்டுக் கோட்டையில் உள்ள மேற்படிக் கதவு அலங்காரம் வீட்டுக்கட்டடக் கலையில் யாழ்ப்பாணத்தின் 'பொற்காலம்' எனக் கூறக் கூடிய காலத்திற்கு உரியதாகும். பேணிப் பாதுகாத்தலில் எவ்வித கவனம் சிறிதுமில்லா நமது தமிழ் சமூகத்திலிருந்து விரைவாக அப்புறப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதும் மாபெரும் வரலாற்றுச் சாட்சியங்களில் இதுவும் ஒன்றாகும். பாலன்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் ஒரு மகா சக்தி

தகவல் பெட்டகம்

இன்றைய நவீன உலகில் ஒலி மிகுந்த நவீன வாழ்க்கை முறையில் மௌனம் ஏற்படுத்தும் தாக்கம் மிகுந்த அக்கறையைப் பெற்று வருகின்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நம்முடைய சகல நடவடிக்கைகளும், நோக்கங்களும் நவீன வாழ்க்கை முறைக்கு ஏதுவாக விரைவும் வேகமும் போட்டி போட்ட நிலையில் அதிகமான ஒலியை ஏற்படுத்துவதாக உள்ளது.

மௌனம் இரண்டு வகைப்படும். ஆன்மீக வாழ்க்கையில் காணப்படும் மௌனம் இவற்றில் முதலாவதாகும். இரண்டாவது பௌதீக ரீதியிலான மௌனம். தோல்வி, அதிருப்தி, இழப்புகள், சோகம், விரக்தி போன்றவற்றில் மூழ்கியுள்ளோருக்கு மௌனத்தை விட வேறெதுவும் ஆறுதல் அளிப்பதாக இருக்காது.

வீடுகளிலிருந்து வெளியாகும் ஒலியாலும், வாகனங்கள், தொழிற்சாலை எந்திரங்கள், விமானங்கள் முதலியன உருவாக்கும் இரைச்சலாலும் அமைதியான சுற்றுப் புறச் சூழல், ஒலி மிகுந்த சூழலாக மாறி மனித ஆரோக்கியத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இப் பாதிப்புகள் பற்றி சமீப காலங்களில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் மௌனம் மக்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் பற்றி இதுவரை எந்த விதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கைகள் இல்லை. ஆனால், ஒலி காரணமாக மனித இனத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சுற்றுப் புறச் சூழலில் அமைதி இல்லாத படியால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைத் தெட்டத் தெளிவாக எடுத் துக் காட்டியுள்ளன.



அபரிமிதமான ஒலி மனிதர்களிடையேயான தொடர்பு பரிமாற்றங்களைப் பாதித்து, மக்களை மனோரீதியாக நோயாளிகளாக்கி விடுகின்றது. ஒலியைத் தொடர்ந்து கேட்பவர்கள் தலைவலி, எரிச்சல் முதலிய குணங்களுக்கு ஆட்படுகிறார்கள் என ஒலியினால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஒலி பௌதிகரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. உளவியல் ரீதியான பாதிப்புகளை உண்டாக்கி மக்களைச் சித்த சுவாதீனமற்றவர்களாக ஆக்குகிறது. எனவே அமைதியைப் பேணுவதற்கு மனித வர்க்கம் தம்மாலான சகல முயற்சிகளையும் எடுத்தல் காலத்தின் கட்டாய தேவையாகும். மேலும் ஆழ்நிலைத் தியானங்களைப் பயிற்சி செய்வதன் மூலம் உளவியல் ரீதியான அமைதியைப் பேணி, மௌனத்தின் அபரிமிதமான சக்தியை நாம் முழுமையாக அடையமுடியும்.

★★★





# எட்டாக்கனி

கனவுகளும்
கண்ணீருடன் கலந்து
வாழ்க்கையே அஸ்தமனமானது!

வறுமையும்
இளமையில் புதைந்து
இலட்சியமே பூச்சியமானது!

கல்வியும்
பணத்தில் படுத்து
சமத்துவமே சமாதியானது!

சொந்தங்களும்
யுத்தத்தில் சிதைந்து
உறவுகளுமே அகதியானது!

நிம்மதியும்
நித்திரையில் தொலைந்து
நிஜமே கானலானது!

முதுமையும்
இல்லத்தில் இணைந்து
அன்பே அநாதையானது!

★★★

-ஜே.எஸ்.ராஜ், யாழ்.பல்கலைக்கழகம்.

# மனமே சாய்ந்துவிடாதே!

அனர்த்தங்களில் இரண்டு உண்டு: அவை இயற்கையாக ஏற்படுகின்ற அனர்த்தங்கள், மனிதனால் உருவாக்கப்படுகின்ற அனர்த்தங்கள் என்பனவாகும். இயற்கை அனர்த்தங்களுக்கு வெள்ளப்பெருக்கு, சுனாமி, நிலநடுக்கம், எரிமலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மனிதனால் ஏற்படும் அனர்த்தங்களுக்குப் போர் அழிவுகள், விஷவாயுக் கசிவு, அணுக்குண்டுப் பரிசோதனைகளால் ஏற்படும் தாக்கங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றினால் மனிதர்களின் மனங்களிலே தோன்றுகின்ற பாதிப்புக்கள், தாக்கங்கள் நெருக்கீடுகளாக மாறுகின்றன. இவை பெரும்பாலான மக்களின் தாங்கும் சக்திக்கு அதிகமாகவே உள்ளன.

போர்ச் சூழலில் நெருக்கீட்டை ஏற்படுத்துகின்ற காரணிகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

★ **உயிரிழப்பு:** குடும்ப உறுப்பினர்களது மற்றும் உறவினர் நண்பர்களினதும் இழப்பு.

★ **காயங்கள்:** குண்டு வீச்சுக்கு இலக்காகித் தேவையான உதவிகள் கிடைக்கப்பெறாமை

★ **வன்முறைகளை நேரடியாகப் பார்த்தல்:** தமது வீடு வளவு, கோயில் போன்ற மற்றும் நிறுவனங்களில் அழிவுகளைக் காணுதல்.

- கொடூரமாக ஏற்படும் மரணங்களைக் காணுதல்
- பெரும் காயங்கள், இரத்தப் பெருக்கு என்பவற்றைக் காணுதல்
- மற்றவர்களின் வேதனைகளையும் நோ போன்ற அவஸ்தைகளையும் காணுதல்.

09

★ **வன்முறைகளை அனுபவித்தல்:**

- போரினால் ஏற்பட்ட காயங்கள்
- சுற்றிவளைப்புக்கள்
- கைதுகள்
- மரண பயம்

★ **இழப்புக்களும் பிரிவுகளும்**

- பெற்றோரையோ பிள்ளைகளையோ பிரிதல்
- குடும்பங்கள் பிரிதல்
- தமது வாழ்விடத்தை, வீட்டை, தாம் வளர்த்த மாடு கன்று, நாய் போன்றவற்றைப் பிரிதல்.
- குடும்ப அங்கத்தவர்கள் காணாமற்போதல்.

★ **இடம்பெயர்வு :** தாம் வாழ்ந்த வழமையான சூழலிருந்து சடுதியாக பழக்கமில்லாத வேறோரிடத்திற்கு இடம்பெயர்தல். அகதியாக, ஏதிலிகளாக வாழுகின்ற கொடுமை, புதிய சூழலுக்கு முகம் கொடுக்கவேண்டி நேர்வது, காலப்போக்கில் அதற்கு இயை பாக்கமடையவேண்டிச் நேர்வது, தமது சொந்த உழைப்பை மேற்கொள்ள முடியாமல் நிவாரணங்களை எதிர்பார்த்தும் மற்றவர் களில் தங்கியிருந்தும் வாழ வேண்டியநிலை, புதிய வாழ்க்கையைக் குடும்பமாகத் தொடங்குவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குதல், உறவினரைச் சந்திக்கமுடியாமை.



வறுமையும் போசாக்கின்மையும் உழைப்புக்கான வாய்ப்பு அற்றுப்போதல் வறுமை நிலையைத் தோற்றிவிக்கின்றது. உடலுக்கு வேண்டிய சத்துணவு கிடைப்பதில்லை, போசாக்கின்மை குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதித்து பெரிய பிரச்சினையாக உருவெடுக்கும்.

★ **நோய்கள்:** அகதி முகாம்களில் மனிதருக்கு நோய் எதிர்ப் புச் சக்தி குறைவடைகிறது. தொற்றுநோய்கள் பரவுகின்றன. சுகாதார சேவைகள், மருந்துகள் கிடைப்பதில் தாமதமும் தடங்கல் களும் ஏற்படுகின்றன.

★ **நிச்சயமற்றநிலை :** எதிர்காலம் எப்படியிருக்குமோ எனத் தெரியாது, பிரச்சினைகள் தீர்ந்து எப்போது வீடு திரும்புவோம் என்பது தெரியாது, முதியவர்கள் தமது வாழ்நாளில் வீடு திரும்புவோமோ என ஏங்குவர், நெருக்கமான வாழ்க்கையில் ஒழுக்கக் குறைபாடுகள் ஏற்படுகின்றன, ஆண்கள் பலர் தகுந்த தொழிலின்றி, குடும்ப நெருக்கமின்றி, மது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர், மதுப்பாவனை என்பது நமது சமுதாயத்திலுள்ள பெரும் அழிவு தரும் நோயாகும். இதனால் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் சிறுவர்களுமே. இது பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொறுப்பு நிறுவனங்களுக்கு உண்டு.

இர- சந்திரசேகர சர்மா M.A.




# கரட் புற்றுநோயைத் தடுக்கும்



கரட்டை தாவரத் தங்கம் என்று கூறுகிறார்கள். தாவரத் தங்கம் என்று பெயர் வந்ததற்குக் காரணம் என்ன என்று பார்ப்போம். தங்கத்தை அணிவதால் மேனிக்கு மெருகு கிடைப்பது போல கரட்டை அவ்வப்போது உணவில் சேர்த்துக் கொள்வதால், தங்கம் போன்று மேனி பளபளக்கும் என்பதனாலேயே அதற்குத் தங்கத் தாவரம் என்று பெயர் வந்தது.

மேலும் புற்றுநோய் வராமல் தடுப்பதில் கரட் முக்கிய பங்குகாற்றுகின்றது. கரட்டில் உள்ள கரோட்டின் என்னும் சத்தானது, புற்றுநோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது.

வயிறு தொடர்பான அனைத்து நோய்களையும் குணப்படுத்துகின்ற ஆற்றலும் கரட்டுக்கு உண்டு.

உதாரணமாக குடல்புண் [அல்சர்] நோய் உள்ளவர்கள், கரட் சாப்பிட்டால் வயிற்றுவலி வருபவர்கள் கரட் சாறினை வாரத்தில் மூன்று தடவை வீதம் இரண்டு மாதம் சாப்பிட்டு வர அவை குணமாகும்.

வாயில் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்குவதற்கும் கரட் துணை புரிகிறது. இந்தத் துர்நாற்றத்திற்கும் வாயோ, பற்களோ காரணமல்ல. வயிற்றுக் கோளாறு தான் காரணம். வாரத்திற்கு ஐந்து நாள்கள் கரட் சாறினை சக்கரை மற்றும் உப்பு எதுவுமின்றி அருந்தி வர வாய்த்துர்நாற்றம் பறந்தோடிவிடும்.

மேலும் கரட்டில் நார்ச் சத்து அதிகம் உள்ளதால் மிகுந்த நன்மை தருவதுடன் செரிமானத்தைத் தூண்டி நல்ல ஜீரண சக்தியையும் அளிக்கிறது.

இத்தனை சிறப்பு வாய்ந்த கரட்டை நீங்களும் அடிக்கடி வாங்கி சமைத்துப் பாருங்களேன். ★★★

# மக்கள் தொகை கணக்கெடுப்பு ஏன் மேற்கொள்ளப்படுகிறது?

மக்கள் தொகை கணக்கெடுப்பானது ஆதிகாலம் முதற் கொண்டு நடைபெற்று வரும் ஒரு சங்கதி. வரி அறவிடுவது, படைகளுக்கு ஆள் சேர்ப்பது போன்ற செயற்பாடுகள் எவ்வளவு பழமை யானவையோ அதே அளவு பழமையானது இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பாகும்.

ஆதிகாலத்தில் ஆட்சியாளர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்களை நடத்தியமைக்குக் காரணம் எத்தனை ஆள்களைப் போர்க்களத்திற்கு அனுப்பலாம் என்பதைக் கணக்கிடவும் எவ்வளவு பணத்தை வரியாக அறவிடலாம் என்பதைக் கண்டுகொள்ளவும் மாத்திரமே இதைச் செய்தார்களாம். மக்கள் தொகை கணக்கெடுப்பினால் மக்கள் பெரிதும் துன்பத்திற்குள்ளானமையால் அவர்கள் கணக்கெடுப்புகள் தவறாகாமல் போகும் வகையில் தம்மாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதுண்டு.

பெரும்பாலன நாடுகளில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது மிகச் சாதாரணமான கேள்வியையே கேட்பார்கள். வீட்டில் வாழ்கின்றவர்களின் எண்ணிக்கை, வயது விவரம், உறவுமுறை, பிறந்த இடம், தேசியம், தொழில் மற்றும் வேலை செய்யும் ஸ்தாபனம் இவைபோன்ற கேள்விகளே கேட்கப்படும். திருமணத்திகதி, பிள்ளைகளின் விவரம் மற்றும் விவசாயம், காணிகளின் எண்ணிக்கை - பயிர்களின் விவரம், கால்நடைகள் பற்றிய கேள்விகளும் கேட்கப்படலாம்.

இவ்வாறு சேகரிக்கப்படும் விவரங்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு பிரிவுகளாகவும் வகுப்புகளாகவும் வெவ்வேறாகப் பிரிக்கப்படும். இவை அரசாங்கத்தின் களஞ்சியங்களில் பத்திரப்படுத்தப்படும். தேவையாகும்போது அரச அதிகாரிகளால் இந்த விவரங்கள் பயன்படுத்தப்படும்.

உதாரணமாக, குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட வயதையுடையவர்கள் நாட்டில் எத்தனை பேர் இருப்பார்கள் அவர்களுக்கான பாடசாலைகள் எத்தனை இருக்க வேண்டும் என்பதை அல்லது தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பான திட்டங்களை வகுக்க அரசுக்கு இந்தக் கணக்கு விவரங்கள் உதவியாக இருக்கும்.

மக்கள் கணக்கெடுப்பானது, நாட்டில் மக்கள் எண்ணிக்கை கூடியிருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்பதைக் காட்டும். மக்கள் நகரப் புறங்களை நோக்கிப் படையெடுத்திருக்கிறார்களா, கிராமப் புறங்களை நாடிச் சென்றுள்ளார்களா என்பதையும் காட்டுவதாக இருக்கும்.


சமூக நிலைமைகள் அபிவிருத்தியடைந்துள்ளனவா, இல்லையா என்பதைக் காட்டும். மேலும் எம் மாதிரியான தொழிற்துறைகள் வளர்ச்சியடைந்துள்ளன என்பதையும் கண்டுகொள்ளலாம்.

மக்கள் எண்ணிக்கையை வைத்தே அரசியல் வாதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதால் ஒவ்வொருபகுதிகளிருந்தும் எத்தனை பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதையும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலமே முடிவு செய்யப்படுகின்றது.

அரசுக்குச் சட்டங்கள் உருவாக்குவதில் மக்கள் கணக்கெடுப்பு உதவுகிறது. வர்த்தகம், சமூக, பொருளாதார விடயங்களில் தீர்மானங்கள் எடுக்கவும் திட்டங்கள் தீட்டவும் உதவுகின்றது. ★★★

-ரம்யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் தேருக்கு எழுந்தருளுவதையும் முருகப் பெருமான் பக்தர்கள் புடை சூழ தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பதையும் விநாயகப் பெருமானது தேரினை பெண்கள் வடம்பிடித்து இழுப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கந்தா)*


**16ஆம் ஆண்டு நெஞ்சில் நீங்கா நினைவலைகள்**

தோற்றம் 12 * 03 * 1941



மறைவு 08 * 07 * 1993

**சிதம்பரி மகேந்திரன்**

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

காலங்கள் பிரிவின் துயரை மாற்றினாலும்
கனவிலும், நினைவிலும் பதிந்திருக்கும்
மாறாத அன்புருவம் உங்களுடன்
வாழ்ந்த பசுமை நினைவுகளை என்றும் நினைவூட்டும்.

நாகம்மாள் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.** (சி/558370)


## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து கணேசமூர்த்தி

(சிற்பாசாரியார் - சாத்துப்படி)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான சரவணமுத்து கணேசமூர்த்தி (05.07.2009) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகிழ்மணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.07.2009) வியாழக்கிழமை இல.64, HENA றோட், கல்கிசையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### ஜோசப் ஜோர்ஜ்



(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், இல.30, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் ஜோர்ஜ் (06.07.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான ஜோசப் இராஜதுரை-மரிய றெஜினா ஆகியோரின் அன்பு மகனும் றோஸ்மலரின் (கரம்பன்) அன்புக் கணவரும், மரியஜசிந்தா (லண்டன்), அனிற்றா அஞ்சலினா (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும், மோகன்ராஜ் (லண்டன்), ராஜ்குமார் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (10.07.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, 5ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மேரி றோஸ்மலர்
(மனைவி)

(86840)

# அகதிகள் வீடு திரும்பாத வரை தேசிய நல்லிணக்கம் ஏற்படாது!

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 8

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்கப்படாதவரைக்கும் -அனாதரவான குழந்தைகளும், பெண்களும், வயோதிபர்களும் உள்ளடங்கலாக லட்சக்கணக்கான மக்களுக்கு அவர்கள் தமது சொந்த வீடுகளில் வாழும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படாதவரைக்கும் - தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

-இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் எமது கட்சிப் பிரதிநிதிகள் எமது பொதுச்செயலாளர் தலைமையில் கலந்து கொண்டனர். எமது கருத்துகள் அங்கே தெரிவிக்கப்பட்டன. எதிர்க்கட்சியினர் உட்பட அனைத்து கட்சியினரையும் அழைத்து மீள் இணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடி இருப்பதை நாம் பாராட்டுகின்றோம். ஆனால் அரசின் கருத்து நிலைப்பாடுகள் தொடர்பிலே எமக்கு தெளிவின்மை இருக்கிறது.

மக்கள் மீளவும் சுயாதீனமாக தமது கிராமங்களுக்கு செல்லவிடாமல் தடுத்து வைத்திருக்கும் காரணம் என்ன என்பது பற்றி நாட்டிற்கு தெரியப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும். முழு வன்னிப் பெருநிலப்பகுதியும் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டு மக்கள் நடமாட முடியாத நிலப்பரப்பு என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. வடபகுதி முகாம்களுக்கு அனைத்து கட்சி தூதுக்குழுவினர் சுயாதீனமாக செல்வதற்கு இடமளிக்கப்படவேண்டும்.

முகாம்களில் வாழுகின்ற அகதிகள் எவராவது விரும்புவார்களேயானால் அவர்கள் சுயாதீனமாக தமது கிராமங்களுக்குச் சென்று தமது வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் முகாம்களில் உடனடியாக சுயாதீன கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு செல்லும் மீள் கட்டுமான பணித்திட்டங்கள் வெளிப்படையாக நடத்தப்படவேண்டும். மீள் கட்டுமானப் பணிகளுக்கு சமாந்தரமாக அதிகாரத்தை பிரித்து வழங்கும் அரசியல் தீர்வுத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண் டும் - என்றார்.


**வீடு விற்பனைக்கு**

திருநெல்வேலி, சிவன் அம்மன் கோயில் வீதியில் 1¼ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: S.S. நாதன்
16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 6146434 (86835)

**விற்பனைக்கு**

உத்தியோகத்தரின் பாவனையில் உள்ள Morris minor (1000) கார் விற்பனைக்குண்டு. [illegible]
077 9228790 (86838)



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர்
**வன்னித்தம்பி சின்னத்துரை**
(இளைப்பாறிய நில அளவையாளர்)

மலர்வு 02.01.1937
உதிர்வு 08.06.2009

08.06.2009 அன்று சிவப்பேறு பெற்ற எமது குடும்பத் தலைவரின் முப்பத்தோராவது நாளான இன்று அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.


இல.05, சேர் பொன்
இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (86842)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



சுதுமலை சிறிபுவனேஸ்வரி அம்மன் ஆலய 2ஆம் திருவிழா உபயகாரர் **அமரர் க.இராசையாவின்** அன்பு மனைவி

**பரமேஸ்வரி**

மண்ணில் 05.09.1930
விண்ணில் 08.06.2009

**எங்கள் நெஞ்சங்கள் இருக்கும்வரை
உங்கள் நினைவுகளைச் சுமந்திருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

என்றும் நினைவுடன்:
மகன்-இ.சரவணபவன் (பழனி),
மருமகள் - ச.தங்கலட்சுமி,
பேரப்பிள்ளைகள் - ஆதவன் [பொறியியலாளர் - சிங்கப்பூர்],
அற்புதராஜன் (டுபாய்), ஆதித்தன் (கட்டார்),
விஜிதா [இலங்கை வங்கி - மானிப்பாய்],
அருளகன் [மரவேலைப் போதனாசிரியரும் சிற்ப ஆசாரியும்]
சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (86836)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 24

சுடர் சிந்தனை :- " அன்பினால் உலகையே வெல்ல முடியும் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

## இலகுவழி ஆங்கிலம்

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA
(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

17.06.2009 Continuity.....

**after, since, until, when, whenever, before, while**

E.g :- When - When Silva came I was not in my room.
உதாரணம்:- சில்வா வந்தபோது நான் அறையில் இருக்கவில்லை.
இதனைப் பகுப்பாய்வு செய்தால்,
I was not in my room என்பது Principal clause.
நான் அறையில் இருக்கவில்லை - பூரண சொற்றொடர்
When Silva came - Adverb clause of time modifying the verb 'was'.

**Analysing the following clauses**
**கீழ்க்காணும் சொற்றொடர்களைப் பகுப்பாய்வு செய்வோம்.**

02. Clause - Wherever I sit to read my mother calls me.
சொற்றொடர் நான் எப்போது படிக்க உட்காருகிறேனோ அப்போது எனது தாயார் கூப்பிடுவார்.
Principal clause - my mother calls me
பூரண சொற்றொடர் எனது தாயார் கூப்பிடுவார்
Adverb clause - Wherever I sit to read
வினையுரிச் சொற்றொடர் நான் வாசிக்க அமரும்போது

★ **Adverb clause of time modifying the verb 'Call'**

03. Clause - While I was at Colombo I bought a pen.
சொற்றொடர் நான் கொழும்பிலிருந்தபோது ஒரு பேனா வாங்கினேன்.
Principal clause - I bought a pen
பூரண சொற்றொடர் நான் பேனா ஒன்று வாங்கினேன்
Adverb clause - While I was in Colombo
வினையுரிச் சொற்றொடர் நான் கொழும்பில் இருந்தபோது

★ **Adverb clause of time modifying the verb 'Bought'**

04. Clause - After my mother woke up, I began to read English.
சொற்றொடர் எனது தாயார் நித்திரை விட்டு எழுந்தபின் நான் ஆங்கிலம் வாசிக்கத் தொடங்கினேன்
Principal clause - I began to read English
பூரண சொற்றொடர் நான் ஆங்கிலம் வாசிக்கத் தொடங்கினேன்
Adverb clause - After my mother woke up
வினையுரிச் சொற்றொடர் அம்மா நித்திரையால் எழுந்தபின்

★ **Adverb clause of time modifying the verb 'Began'**

05. Clause - It is five years since I went to Singapore.
சொற்றொடர் நான் சிங்கப்பூருக்குச் சென்று ஐந்து வருடங்கள் ஆகின்றன.
Principal clause - It is five years
பூரண சொற்றொடர் ஐந்து வருடங்கள் ஆகின்றன.
Adverb clause - since I went to Singapore
வினையுரிச் சொற்றொடர் நான் சிங்கப்பூருக்குச் சென்று

★ **Adverb clause of time modifying the verb 'Is'**

**Excerice - 02**
**Analyse the following into clauses giving the Construction of each.**

01. I do not speak while she is singing.
அவள் பாடிக்கொண்டிருக்கும்போது நான் பேசுவது இல்லை.

02. He came after night had fallen.
அவன் இருண்டபின்பு வந்தான்.

03. There was silence as the leader spoke.
தலைவர் பேசும்போது அங்கு அமைதியாக இருந்தது.

04. Before you go, bring me some water.
நீர் போவதற்கு முன்னர் எனக்குக் கொஞ்சம் தண்ணீர் எடுத்துத்தரவும்.

05. The doctor comes whenever I am sick.
நான் நோய்வாய்ப்பட்டிருக்கும் போதெல்லாம் வைத்தியர் வருவார்.

06. I waited for my friend till the principal came out.
அதிபர் வெளியில் வரும்வரை எனது நண்பனுக்காகக் காத்திருந்தேன்.

07. As long as I am a teacher I teach English.
நான் ஓர் ஆசிரியராக இருக்கும்வரை ஆங்கிலம் கற்பிப்பேன்.

08. As soon as I went my sister began to write English.
நான் வெளியில் சென்றவுடன் எனது சகோதரி ஆங்கிலம் எழுதத் தொடங்கினாள்.

09. Just I bought a pen and wrote letter.
இப்போதுதான் நான் பேனா ஒன்று வாங்கி கடிதம் எழுதினேன்.

10. Whenever students came to the class the teacher who was a good man asked them to write English.
வகுப்புக்கு மாணவர்கள் வந்தபோதெல்லாம் அவர்களை நல்லவரான அந்த ஆசிரியர் ஆங்கிலம் எழுதச்சொன்னார்.

11. Skies brightened after it rained.
மழைபெய்து முடிந்தபின் வானம் வெளுத்தது.

12. The wind blew until the Sun set.
சூரியன் மறையும்வரை காற்று வீசியது.

13. The cricket game will continue unless it rains heavily.
மழை பெரிதாகப் பெய்யும்வரை கிரிக்கெட் விளையாட்டுத் தொடரும்.

**II. Adverb clause of Place**
**இடத்துடன் சேர்ந்த வினையுரிச்சொல்**

விசேடிக்கப்படும் வினைச்சொல்லானது, எந்த இடத்தில் நிகழ்கின்றது என்பதை விளக்கும். Subordinate clause I Adverb clause of Place என அழைப்பர்

**E.g :-**
உதாரணம்:-

Clause - I sat on the place where uncle had died.
சொற்றொடர் மாமனார் இறந்த இடத்தில்நான் இருந்தேன்.
Principal clause & I sat on the place
பூரண சொற்றொடர் நான் இருந்தேன்
Adverb clause & where uncle had died.
வினையுரிச் சொற்றொடர் மாமனார் இறந்த இடத்தில்

★ **Adverb clause qualifying the noun 'Place' This is a complex sentense.**

**III. Adverb clause of Reason or Manner**
வினையுரிச் சொற்றொடர் காரணம், நடத்தை
Cheif Conjunction - பிரதான இணைப்புச் சொல்

**as, how, in, that, because, since, if**

விசேடிக்கக்கூடிய வினைச்சொல்லின் காரணத்தை விளக்கி நிற்கக்கூடிய Subordinate clause உபவாக்கியம் Adverb clause of Reson or Mannerஆகும்.

**E.g :-**

Clause - As he was not in the room I did not get the book
சொற்றொடர் அவன் அறையினுள் இல்லாததால் எனக்குப் புத்தகம் கிடைக்கவில்லை.
Principal clause - I did not get the book
பூரண சொற்றொடர் நான் புத்தகத்தைப் பெறவில்லை
Adverb clause - As he was not in the room
வினையுரிச் சொற்றொடர் அவன் அறையில் இல்லாததால்

**Excerice - 03**
**Analyse the following into clauses and give the construction of each**

01. When I began to write English two boys came to me.
நான் ஆங்கிலம் எழுத முனைந்தபோது இரண்டு சிறுவர்கள் என்னிடம் வந்தனர்.

02. They sat where I had kept my book.
நான் எனது புத்தகம் வைத்திருந்த இடத்தில் அவர்கள் அமர்ந்தனர்.

03. Though they were very young they could write English well.
அவர்கள் மிகச் சிறியவர்களாக இருந்தாலும் அவர்களால் நன்றாக ஆங்கிலம் எழுத முடியும்.

04. One of them gave me an umbrella which was black.
அவர்களில் ஒருவர் எனக்கு ஒரு குடை தந்தார். அது கறுப்பு.

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் புதன் கிழமை இலகுவழி ஆங்கிலம்-25 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035,021-2223837

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்திய
# ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் கோப்பாய், தெல்லிப்பழை அணிகள் சம்பியன்

வலி.வடக்கு,ஜூலை 8

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் தெல்லிப்பழை, கோப்பாய் பிரதேச செயலக அணிகள் மாவட்டச் சம்பியன்கள் ஆகின.

**பெண்கள்**

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் எ.சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகமும் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் கழக அணி 25:10,25: 09 என்ற புள்ளிகள் அடிப்படையில் கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணியை வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

மாவட்ட மட்டப் போட்டியில் இந்த அணிகள் வெற்றி பெற்றுள்ள போதிலும் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகள் ஏற்கனவே முடிவடைந்துள்ள நிலையில் இந்த அணி தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொல்வதற்கான வாய்ப்பு இல்லையென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆண்கள்**

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகமும், கோப்பாய் பிரதேச இளைஞர் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் கோப்பாய் பிரதேச இளைஞர் கழகம் எதிரணியினரின் எதிர்ப்புகளை முறியடித்து வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி முதல் மூன்று நேர் சுற்றுக்களை முறையே 25:20, 25:16, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மாவட்டச் சம்பியனாகியது. (50-86)



யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனான தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக அணியையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற கரவெட்டிப் பிரதேச செயலக அணியையும் படங்களில் காணலாம். *(படங்கள்:தேசன்)*

## தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்திய
# ஆண்களுக்கான தடகளப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூலை 8

யாழ்.மாவட்ட இளைஞர்கள் சேவைகள் மன்றம் யாழ்.மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்திய 20 வயது முதல்29வயது வரையான ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:-

**100 மீற்றர் ஓட்டம்**

ஏ.அமல்ராஜ்(கரவெட்டி), எஸ்.சிவசொருபன்(கோப்பாய்), எஸ்.காந்தராஜா (யாழ்ப்பாணம்).

**200 மீற்றர் ஓட்டம்**

ஏ.அமல்ராஜ்(கரவெட்டி), எஸ்.சிவசொருபன்(கோப்பாய்), கே.சிவகுமார் (தெல்லிப்பழை).

**400 மீற்றர் ஓட்டம்**

எஸ்.ஐங்கரன்(கோப்பாய்), எஸ்.அனுராகன் (தெல்லிப்பழை),ஏமரியதாஸ்(யாழ்ப்பாணம்).

**800 மீற்றர் ஓட்டம்**

ஆர்.நிசாந்(உடுவில்), எஸ்.அனுராகன் (தெல்லிப்பழை).

**1500 மீற்றர் ஓட்டம்**

ஏ.நித்தியானந்தன்(சாவகச்சேரி), ஆர்.நிசாந்(உடுவில்), கே.பவிலரசு (தெல்லிப்பழை).

**10,000 மீற்றர் ஓட்டம்**

ஏ.நித்தியானந்தன்(சாவசக்சேரி), கே.பவிலரசு(தெல்லிப்பழை), எம்.யகிம்சன்(கோப்பாய்).

**வேக நடை**

ஆர்.நிசாந்(உடுவில்), ஆர்.தமிழ்வாணன்(உடுவில்), எம்.யகிம்சன் (கோப்பாய்).

**உயரம் பாய்தல்**

கே.ஜெயந்தன்(கோப்பாய்), கே.நித்தியானந்தன்(கோப்பாய்).

**நீளம் பாய்தல்**

ஏ.அமல்ராஜ்(கரவெட்டி), ந.சுவேந்திரன்(கரவெட்டி), கே.சுகந்தன் (உடுவில்).

**தட்டெறிதல்**

ஆர்.ரதீஸ்வரன்(தெல்லிப்பழை), ரி.கஜன்(கோப்பாய்).

**குண்டெறிதல்**

ஆர்.ரதீஸ்வரன்(தெல்லிப்பழை), கே.ஜெயந்தன்(கோப்பாய்).

**ஈட்டி எறிதல்**

பி.சந்தோஷ்(தெல்லிப்பழை), ரி.கஜன்(கோப்பாய்),கே.சுகந்தன்(உடுவில்).

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

கரவெட்டி பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

உடுவில் பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

(50-86)

# சென்.ஜோன்ஸ் அணியுடனான ஆட்டத்தில் 58 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மகாஜனா

வலி.வடக்கு, ஜூலை 8

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் மகாஜனக் கல்லூரி 58 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும், மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மோசிகீரன் 57 ஓட்டங்களையும் டிலோசன் 35 ஓட்டங்களையும் பிரசாந்16 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 50 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கவாஸ்கர் 10 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், எட்வின்ஜோய் 09 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் துஸ்யந்தன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

183 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 29 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அமிர்தஜன் 44 ஓட்டங்களையும் துஷ்யந்தன் 15 ஓட்டங்களையும் ஜெனில் 12 ஓட்டங்களையும் சஜன் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ஜனந்தன் 07 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் பிரசாந் 06 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் திலக்சன் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களால் வெற்றி

வலி.வடக்கு, ஜூலை 8

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 08 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பிரசாந் 29 ஓட்டங்களையும் விதுசன் 13 ஓட்டங்களையும் கலைச்செல்வன் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 45 ஓட்டங்களும் பெறப்பட்டன. பதிலுக்குக் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 17.2 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. சஜீகன், ஜஸ்மின் ஆட்டமிழக்காது முறைய 34,16 ஓட்டங்களையும் கல்சோபன் 27 ஓட்டங்களையும் மதுசன் 26 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டாா்கள். (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதவியுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனான யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு அதிபர் சு.ஓங்காரமூர்த்தி வெற்றிக் கிண்ணத்தையும் பரிசில்களையும் வழங்குவதையும்,

வெற்றியீட்டிய யாழ்.மத்திய கல்லூரி வீரர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான வெளியுறவுக் கொள்கையால் இந்தியாவுக்கு ஆபத்து - நெடுமாறன்

சென்னை, ஜூலை 08



தவறான வெளியுறவுக் கொள்கையால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது - என்று தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கோவை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் சட்டத்தரணிகள் சங்கக் கூட்டம் கோவையில் நடைபெற்றது. அங்கு சிறப்பு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

அமெரிக்கா தலைமையிலும், சோவியத் ரஷ்யா தலைமையிலும் உலகம் இரண்டாக காணப்பட்டது. மூன்றாம் உலகப்போர் வரும் என்ற அச்சம் நிலவியபோது ஜவஹர்லால் நேரு அணிசேரா நாடுகள் கூட்டமைப்பை ஏற்படுத்தினார். இதனால் மூன்றாம் உலகப்போர் வருவது தடுக்கப்பட்டது. ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆக்கிரமிக்கும்போது குரல் கொடுத்தது அப்போதைய இந்தியா.

நேருவைத் தொடர்ந்து இந்திராகாந்தியும் அணிசேராக் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடித்தார். வாஜ்பாயும் இதனைப் பின்பற்றினார். ஆனால் ராஜீவ் காந்தி காலத்தில் இக் கொள்கை அடியோடு மாற்றப்பட்டது. இந்திரா காந்தி இருந்திருந்தால் இலங்கையில் ஒரு லட்சம் தமிழர்கள் கொல்லப்படும் அவலநிலை இருந்திருக்காது.

இலங்கையில் சீனா, மற்றும் பாகிஸ்தான் நாடுகள் கால் ஊன்றி விட்டன. இலங்கை இராணுவத்தின் வெற்றிக்கு 20 நாடுகள் உதவி செய்ததே காரணம் என்று அந்த நாடு கூறியுள்ளது. இலங்கையில் சீனா ஆயுதக் கிடங்கை திறக்க இலங்கை அரசு அனுமதியளித்துள்ளது. இந்திரா காந்தி இலங்கையில் இராணுவத் தளம் அமைப்பதைத் தடுத்தார். ஆனால் இப்போது ஆயுதக் கிடங்கே திறக்கப்பட்டுள்ளது. இது தென் ஆசிய நாடுகளுக்கு ஆபத்து.


மேலும் இலங்கையிலுள்ள துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றும் குத்தகை சீனாவுக்கு கொடுக்கப்பட்டு உள்ளது. கடல் மார்க்கம் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள்சென்று விட்டது. தற்போது மன்னார் வளைகுடாவில் பெற்றோல் எடுக்கும் உரிமமும் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்புக் கருதி நேரு, தென் மாநிலங்களில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் அமைக்க திட்டமிட்டார். அதன்படி தென் மாநில பகுதிகளில் தொழிற்சாலைகள் உருவாகின.

ஆனால், இலங்கையில் சீனாவின் நுழைவு தென் மாநில பகுதியைப் பாதிக்கும் ஆபத்தாக மாறிவிட்டது. இங்குள்ள அணுமின் நிலையங்களில் தாக்குதல் நடத்தினால் கதிர் வீச்சால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். கூடங்குளத்தில் தாக்குதல் நடத்தினால் மதுரையைத் தவிர மற்ற தென் மாவட்ட பகுதிகளும், திருவனந்தபுரம் பகுதிவரை அழிவு ஏற்படும்.

ஆகவே, ராஜீவ்காந்தி உருவாக்கிய தவறான வெளியுறவுக் கொள்கையால் இந்தியாவுக்கே பேராபத்து உருவாகும் நிலை ஏற்பட்டு விட்டது.

தமிழீழத் தலைவர் பிரபாகரன் மிக நன்றாக நலமாக உள்ளார். விரைவில் வெளிவந்து உங்களையும் என்னையும் மகிழ்விப்பார்.

கடந்த 30 ஆண்டுகளில் 2 லட்சம் ஈழத் தமிழர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். 12 லட்சம் பேர் அகதிகளாக இந்தியா உட்பட உலக நாடுகளில் காணப்படுகின்றனர். இவ்வாறு தியாகம் செய்த போராட்டம் தோற்காது. இது பகல்கனவு அல்ல. கச்சதீவுப் பிரச்சினை பற்றி பொது நல வழக்குத் தொடர முடியுமானால் அதைத் தொடரலாம் - என்றார்.




காரைக்கால் அம்மையார் மாங்கனித் திருவிழா கடந்த 4ஆம் திகதி காரைக்காலில் தொடங்கியது. முக்கிய நிகழ்ச்சியான இந்த மாங்கனித் திருவிழா நேற்றுமுன்தினம் நடந்தது. பிச்சாண்டவர் வேடத்தில் சிவன் எழுந்தருளி வீதியுலா சென்றபோது, பாரதியார் தெருவில் கூடியிருந்த பக்தர்கள் மத்தியில் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு இளம்பெண் ஒருவர் மாங்கனிகளை வீசியபோது.....

# பட்ஜெட்டில் ஈழத்தமிழருக்கு 500 கோடி ரூபா: பாராட்டி நன்றி தெரிவிக்கின்றார் கருணாநிதி

சென்னை, ஜூலை 8



இலங்கையில் உள்ள தமிழர்களின் நிவாரணப் பணிகளுக்காக 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஏற்கனவே பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளபடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு முதல்வர் கருணாநிதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஏழைகள் மற்றும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. வேளாண்துறைக்கு முன்னுரிமை அளித்து, விவசாயிகளுக்கு ரூபா 3 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபா பயிர்க்கடன்-வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிர்க் கடன்களை முறையாக திருப்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு ஒரு சதவீத வட்டி குறைப்பு அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பதும், விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி மற்றும் தீர்வுத் திட்டத்தை இந்த ஆண்டு இறுதிவரை நீடித்திருப்பதும் பாராட்டுக்குரியவை.

பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உரு வாக்க அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது சிறப்பானது. ஜவாஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்துக்கு 12 ஆயிரத்து 887 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளமை பாராட்டுக்குரியது.

குடிசைகள் இல்லாத நிலையை உருவாக்க வகை செய்யும் ராஜீவ் குடியிருப்புத் திட்டத் துக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளமை வரவேற்கத் தக்கது.

இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வுப் பணிகளுக்காக ரூபா 500 கோடி ரூபாவை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துப் பிரிவினரும் பயன் பெறத்தக்கவகையில் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.




# தமிழ் பேசுவதில் தடுமாற்றமில்லை நடிகை ஐஸ்வர்யா ராய் கூறுகிறார்

சென்னை, ஜூலை 08



தமிழ் பேசுவதில் எனக்கு எந்தத் தடுமாற்றமுமில்லை - என்று நடிகை ஐஸ்வர்யா ராய் கூறினார்.

ரஜினியுடன் 'எந்திரன்' படத்தில் நடித்து வரும் அவர், இதுகுறித்து மேலும் கூறியவை வருமாறு -

தமிழில் எனது முதல் படம் 'இருவர்'. இப்படத்தை மணி ரத்தினம் இயக்கினார்.

அப்படத்தில் நீண்ட தமிழ் வசனங்கள் தரப்பட்டன. அன்றுமுதல் 'எந்திரன்' படம் வரை எனது தமிழ்ப் பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. பிராந்திய மொழிகளில் எனக்கு தடுமாற்றம் கிடையாது.

தமிழ் எனக்கு பரிட்சயமான மொழி இல்லையென்றாலும் அதன் பொருளையும், உணர்வுகளையும் அறிந்து பேசுகிறேன்.

எந்திரன் படத்தில் நானே வசனம் பேசி நடித்து வருகிறேன். சரியான வசனம் பேசும் வரை எத்தனை தடவை வேண்டுமானலும் படம் எடுக்க இயக்குநர் ஷங்கரும், நடிப்பதற்கு ரஜினியும் தயாராக இருந்தார்கள்.

ஆனால் வசனத்தை உணர்ந்து நடிப்பதில் ஈடுபாடு காட்டுவதால் அவர்களது பாராட்டைப் பெறும் அளவுக்கு பேசி நடிக்கிறேன் - என்றார்.

# ஈழத் தமிழர்களுக்காக இந்த ஆண்டு பிறந்தநாளை கொண்டாடுவதில்லை

## வைரமுத்து தெரிவிப்பு

சென்னை, ஜூலை 08



ஈழத் தமிழர்களின் துயரத்தில் பங்கேற்கும் விதத்தில் நான் எனது பிறந்த நாளை இந்த ஆண்டு கொண்டாடப் போவதில்லை - என்று கவிஞர் வைரமுத்து கூறியுள்ளார்.

அமெரிக்காவில் வட அமெரிக்க தமிழ்ச் சங் கத்தின் மாநாடு நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஈழத்து கலை நிகழ்ச்சி இங்கே நடந்த போது, என் கண்களின் ஓரம் ஈரமானது. அங்கு போர் நின்று விட்டது எனச் சொல்லப்படுகிறது. களம் ஓய்ந்து விட்டாலும், காரணங்கள் அப்படியே தான் இருக்கின்றன.

அப்பாவித் தமிழர்கள், சம உரிமையோடு, அவரவர் நிலத்தில் குடியமர்த்தப்பட வேண்டும். அவர்களின் துயரத்தில் பங்கேற்கும் விதத்தில் நான் எனது பிறந்த நாளை இந்த ஆண்டு கொண்டாடப் போவதில்லை.

அஸ்தமனம் என்பது சூரியனின் மரணம் அல்ல. கிழக்கு சிவக்கும், மறுபடி உதிக்கும். அதுபோல் ஈழம் பிறக்கும் - என்றார்.

# பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்

## பிரதமர் மன்மோகன் வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 08



இந்தியா போன்ற வளரும் நாடுகள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உலக நாடுகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு அவசியம் - என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

நாளை இத்தாலியில் தொடங்கவிருக்கும் ஜி- 8 நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்வதற்கு முன்னர் விடுத்த அறிக்கையிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, இந்தியா போன்ற வளரும் நாடுகளின் ஏற்றுமதியையும், மூலதன வரவுகளையும் பாதித்திருக்கிறது. இந்தத் தோல்விகளுக்குத் தீர்வு காணவும், பொருளாதாரத்தை மீட்கவும் உலகளாவிய ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு அவசியமாகிறது. சர்வதேச நிதி நிர்வாகமும் வளரும் நாடுகளும் ஸ்திரமான நீடித்த பொருளாதார வளர்ச்சியை எட்டுவதே நம்முடைய விருப்பம்.

உணவுப் பாதுகாப்பு, எரிசக்திப் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் ஆகியவை ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. நீடித்த வளர்ச்சி என்ற நம்முடைய இலக்கை எட்ட வேண்டுமானால் இவை மூன்றையும் ஒரே நிலையில் அணுக வேண்டும். பருவநிலை மாற்றத்தால் வளரும் நாடுகள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் வளர்ந்த நாடுகள் மேற்கொண்ட தீவிரத் தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகளும், அந்த நாடுகளில் உள்ள வாழ்க்கை முறைகளும்தான் இந்தச் சிக்கலுக்குக் காரணம். ஆகவே, பருவமாற்றப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை வளர்ந்த நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ப)

# காங்கிரஸை விமர்சித்து புத்தகம்; 22இல் வெளியிடுகிறார் மாயாவதி

லக்னோ, ஜூலை 08



'தலித் பெண் ஏன் பிரதமராக முடியவில்லை' என்ற தலைப்பில் உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி 112 பக்கங்களில் சிறிய புத்தகம் எழுதியுள்ளார். முழுக்க, முழுக்க காங்கிரஸ் கட்சியைத் தாக்கி எழுதப்பட்ட இந்தப் புத்தகம் ஜூலை 22ல் வெளியிடப்படுகிறது.

மத்திய அரசை எதிர்த்து அன்றைய தினம் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்த பகுஜன் சமாஜ் கட்சி திட்டமிட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தில் மாயாவதி எழுதியுள்ளவை வருமாறு -

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுஷில் குமார் ஷிண்டே, மீராகுமார், ராம் விலாஸ் பஸ்வான் போன்றவர்களைப் பயன்படுத்தி காங்கிரஸ் வாக்குகள் பெறுகிறது. ஆனால் இந் தத் தலைவர்களுக்கு முக்கிய பதவிகள் கொடுப்பதில்லை.

மகாராஷ்ட்ராவில் கடந்த தடவை தேர்தல் முடிந்ததும் முதல்வர் பதவியிலிருந்து ஷிண்டே நீக்கப்பட்டு ஆந்திர மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். அதுபோல் இப்போது மீரா குமார் மக்களவை சபாநாயகராக்கப்பட்டு இருக்கிறார்.

தலித் தலைவர்களை மக்களிடம் நெருங்க விடாமலும், தீவிர அரசியலில் ஈடுபட விடாமலும் விலகியிருக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் செய்யும் சதிதான் இது.

காங்கிரஸ் தலைவர்கள் (ராகுல் காந்தி) நள்ளிரவில் நாடகம் நடத்துகிறார்கள். தலித் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர்களுடன் அமர்ந்து உணவு சாப்பிடுகிறார்கள். காந்திஜியும் தனது வாழ்நாள் முழுவதும் இதைத்தான் செய்தார்.

அமெரிக்காவில் கறுப்பரான ஒபாமா ஜனாதிபதியாகியிருப்பது நமக்கு நம்பிக்கையைத் தருகிறது - என்று அதிலுள்ளது.

அதேவேளை, மாயாவதியின் இந்தக் குற்றச்சாட்டு, காங்கிரஸ் தலைவர்களுக்கு கோபத்தை உண்டாக்கியுள்ளது. இதுகுறித்து உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் திவிஜேந்திர திரிபாதி கூறுகையில் -

பகுஜன் சமாஜ் கட்சியில் தலித்துக்களின் நிலை என்ன? அவர்களுக்கு மாயாவதி ஒரு போதும் முக்கிய பதவி கொடுத்தது இல்லை. விரக்தியடைந்தவரால்தான் இதுபோன்ற அறிவற்ற குற்றச்சாட்டுகளை கூறத்த முடியும் - என்றார்.

# பெண்ணின் வயிற்றில் 28 வருடங்களாக இருந்த விளாங்காய் அகற்றப்பட்டது

பெரம்பலூர், ஜூலை 08

பெண் வயிற்றில் 28 ஆண்டுகளாக இருந்த விளாங்காயை பெரம்பலூர் அரசு மருத்துவமனை வைத்தியர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் திங்கட்கிழமை அகற்றினர்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தில் உள்ள கழனிவாசல் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமியின் மனைவி பத்மாவதி (வயது - 50). இவருக்கு கடந்த ஓராண்டாக அவ்வப்போது வயிற்று வலி இருந்ததாம்.

இந்நிலையில், கடந்த 2 நாள்களாக அவருக்குத் தொடர்ந்து வயிற்று வலி ஏற்பட்டது. இதையடுத்து, அவர் பெரம்பலூர் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பரிசோதித்த அரசு வைத்தியர் பிரியா வசந்தகுமாரி, பத்மாவதியின் வயிற்றில் கட்டியிருந்ததைக் கண்டறிந்து திங்கட்கிழமை அறுவைச் சிகிச்சை செய்தார். அப்போது அவரது வயிற்றில் இருந்தது விளாங்காய் எனத் தெரியவந்தது.

இதுகுறித்து வைத்தியர் பிரியா வசந்தகுமாரி கூறியவை வருமாறு -

கடந்த 28 ஆண்டுகளுக்கு முன் பத்மாவதி தனது கர்ப்பப்பையை இறங்காமல் இருப்பதற்கும், குழந்தை பிறப்பைத் தடுப்பதற்கும் தனது வயிற்றில் விளாங்காயை வைத்திருந்தது தெரியவந்தது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SGBV Working Group, Jaffna**

# VACANCY

**Post of GBV COORDINATOR (Contract Basis)**

Applications are invited for the above Post.
Under the Guidance of the Regional Director of Health Services, Jaffna and under direct guidance of Psychosocial Coordinator, the Gender Based Violence (GBV) Coordinator is responsible for the Planning, Implementation and Coordination of GBV activities in Jaffna District.

This is a challenging post, which requires commitment, creative thinking and determination. The postion enables the individual to carryout important work on GBV issues in Jaffna. He/ She will make important contributions, culturally as well as socially. He/ She will contribute to creating socil solutions and capital, through helping to build trust and reciprocity among citizens, through GBV related campaign and projects.

Further details could be obtained from the Psychosocial Coordinator, RDHS Office in Jaffna.

Applications should reach on or before 20th July 2009.

**Regional Director of Health Services**
**RDHS Office, Hospital Road, Jaffna. 021 222 3911**

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

**மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2009**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office, 3 Months, 2500/= | Diploma in Desktop Publishing, 4 Months, 15000/= 3000/= | Diploma in Web page Designing, 3 Months, 15750/= 3150/= |
| Diploma in Graphic Publishing, 4 Months, 15750/= 3150/= | Diploma in Hardware Engineering, 3 Months, 15000/= 3000/= | Diploma in AutoCAD, 3 Months, 15000/= 3000/= |
| Accounting Package (Quick Book), 3 Months, 15750/= 3150/= | Diploma in Computer Science, 4 Months, 15750/= 3150/= | Honors Diploma in Computer Science, 4 Months, 18000/= 3600/= |

50% Off

ADVANCE COURSES
Diploma in Video Editing 4250/=
Diploma in Multimedia 3750/=

computer express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும், சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள், வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch
I : 09/07/2009 9AM
II : 10/07/2009 9AM
III : 11/07/2009 10AM
IV : 12/07/2009 10AM
V : 14/07/2009 9AM


## துர்க்கை அம்மனுக்கு புதிய மஞ்சம்

வலி.வடக்கு, ஜூலை 8

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் புதிய மஞ்சத்திற்கான பவளக் கால் வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பவளக்காலை அகில இலங்கை இந்துமா மன்றத்தின் செயலாளர் கந்தையா நீலகண்டன் வைத்தார்.

ஆசியுரைகளை கீரிமலை நகுலேஸ்வர ஆலய பிரதமகுரு இராஜஸ்ரீ.கு.நகுலேஸ்வரக்குருக்களும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய பிரதமகுரு மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்களும் வழங்கினார்கள். புதிய மஞ்சம் அமைக்கும் பணிகள் நடைபெறும் அதேவேளையில் மஞ்சம் விடுவதற்கான கொட்டகை வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

புதிய மஞ்ச வெள்ளோட்டம் இந்த வருடாந்த திருவிழாவின் போது இடம்பெறுவதுடன் மஞ்சத்திருவிழாவில் சுவாமி புதிய மஞ்சத்தில் வீதியுலா வரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் திட்டநிறைவு விழாவும்

நவாலி, ஜூலை 8

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் சாந்திகத்தின் திறன் விருத்திச் பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கிராம மட்டத்திலான திட்ட நிறைவு விழாவும் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறும். (50-100)

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி சபையின் தலைவர், பணிப்பாளர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இந்தக் கைத்தொழில் பேட்டையில் தொழில் முயற்சியை ஆரம்பிக்க ஆர்வமுள்ளவர்கள், முன்னர் கைத்தொழில் முயற்சியைக்கொண்டு நடத்தியவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-204)


## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



"தமிழ்ப் பேராசான்"
திரு.நாகலிங்கம் குழந்தைவேலு

கற்பித்தல் என்ற தான
கலையினை இதுதான் என்றே
மற்றவர் அறியச் செய்தோன்
மாணவருலகுக் கெல்லாம்
நற்றெய்வும் இவனேயாவான்
நாடிய தேர்வில் எல்லாம்
வெற்றியைக் கொடுப்பதான
வித்தையின் நுட்பம் தேர்ந்தோன்.

ஆக்கம்:
புலவர் ம.பார்வதிநாதசிவம்.

(86837)

யூனிவேர்சல் கல்வி நிலையம்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்).

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

ரமணாகரன் தர்ஷிகா தம்பதியரின் செல்வப்புதல்வன்



**பிரஷ்னா**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (08.07.2009) புதன்கிழமை
திருநெல்வேலியில் உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடுகின்றார்
அவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா,
பாட்டாமார், பாட்டிமார், மாமாமார், அத்தைமார்,
சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார்,
பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார்,
மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும்
பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.





தகவல்: தாத்தா (கிளி கடை)
சிவன்வீதி, பரமேஸ்வரநெல்வேலி



## பாராட்டி வாழ்த்துகின்றேன்

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் வணிகவியலில் கல்வி பயின்று 2008 இல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான சத்தியசீலன் நவதர்சனை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

அப்பலிங்கம் உமாவாகீசர் (J.P)
ஏழாலை மேற்கு.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 28.01.1971
இறப்பு: 08.07.2007

அமரர்
கிறிஸ்த்தோத்திரம்
கிருபாகரன்

ஆல விருட்சமாய் இருந்து - உம்
உறவுகளை தாங்கி நின்றீர் ஐயா -அது
வேருடன் சாய்ந்ததினால் - இன்று
தடுமாறுகின்றோம் உலகில் நாம்
காலமகள் ஏட்டினிலே
காவியமாய் ஆகிவிட்டாய் ஐயா
மக்கள் எம் மனதிலே - என்றும்
அழியா ஓவியமாய் ஆகிவிட்டாய்

மனைவி, பிள்ளைகள்,
பற்றிமா வீதி, மாதகல். மாமி மற்றும் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்



*பிலிப்பையா பெனடிக்ற்*

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்), தீவகம்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நாலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா பெனடிக்ற் 04.07.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இறப்பியேல் பிலிப்பையா- விக்ரோறியாவின் அன்பு மகனும் யேசுமலரின்- டெய்சி (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் ஆன் கவிதா (லண்டன்), Dr.ஜேன் சங்கீதா (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), நொயலின் ஜீவிதா (மத்திய வங்கி, கொழும்பு), நொயல் ஜீவன் (மாணவன்- புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற மேரி றோசலின் மற்றும் மரியதாஸ், ஜெராட் (கனடா), மேரி மாகிறட், மேரி யசிந்தா (கனடா), மேரி புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பிலிப் -மேரி சூசைமுத்தம்மா தம்பதியரின் மருமகனும் யோசப் கியோமார் (கனடா), அருட்தந்தை டொண்பொஸ்கோ (செ.தா.), அருட்சகோதரி ஜீவமலர் (தி.கு.க.), துரைரட்ணம் (கனடா), பற்றிமா மேரி தங்கமலர் (கனடா), ஜெயரட்ணம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சார்ள்ஸ் ஜெயசீலனின் மாமனும் அன்ரோனி பிலிப்ஸின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (08.07.2009) பி.ப.3 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி யேசுமலர் பெனடிக்ற் (மனைவி).
31/2, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (86841)

## தென்னாசிய சமூக விஞ்ஞான நிதியமும் காங்கேயன் கலைக்கோட்டமும்

இணைந்து நடத்தும்
வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் M.phil அவர்களின்

**"மகாஸ்தபதி கோவிந்தராஜுவின் தேர்த்திறன்"**
**கலை நூல் வெளியீட்டு விழா**

தலைவர்: மா.வேதநாதன் எம்.ஏ., பி.எச்.டி.
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
இடம்: நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்
காலம்: 11.07.2009 சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி
வெளியீட்டுரை: பேராசிரியர் கலாநிதி அ.வே.மணிவாசகர்
(எம்.ஏ., பி.எச்.டி. தலைவர், அரசறிவியல் விஞ்ஞானத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
நூல் விமர்சன உரை: பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா எம்.ஏ.
(வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

ஆர்வலர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டுக் குழு, யாழ்ப்பாணம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
ஸ்ரீமுருகன் கலை சிற்பாலயம், மயிலிட்டி, இருபாலை.

(அ/559393)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் வசதியற்ற குடும்பங்களை மேம்படுத்தும் உதவித்திட்டத்தின் கீழ் உள்ளீடுகளை வழங்கும் நிகழ்வுகள் சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூன்று இடங்களிலும் முறையே கண்ணாடி, சைக்கிள், உதவித்தொகைக்கான கொடுப்பனவு ஆகியவற்றை வழங்கும் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# 13ஆவது திருத்தத்துக்குப் பதிலாக வேறு தீர்வு யோசனை இருக்கிறதா?

## அரசிடம் கேட்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜூலை 8

தேசிய பிரச்சினைக்கான தீர்வாக 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்த அரசு விரும்பவில்லை என்றால், தனது தீர்வுத்திட்டத்தை அரசு உடன் முன்வைக்கவேண்டும் என்றும் அத்தீர்வுத் திட்டத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்து அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் செனவிரட்னவே இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதில் அரசு காலந்தாழ்த்திக் கொண்டு வருகிறது. அரசு 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக முன்வைக்குமா இல்லையா என்று கூறவேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைக்காவிட்டால் பரவாயில்லை. அதற்குப் பதிலாக அரசு எந்தத் தீர்வை முன்வைக்கப் போகின்றது என்பதை சொல்ல வேண்டும்.

அத்தீர்வுத் திட்டத்தை ஆராய்ந்து பார்த்து அதன் நன்மை, தீமைகளை கருத்திற்கொண்டு நாம் அதற்கு ஆதரவு தருவோம். தீர்வுத் திட்டத்தை அரசு இனி மேலும் தாமதப்படுத்தக்கூடாது.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கையை அரசு துரிதப்படுத்தவேண்டும். இந்த மக்களை அரசியல் கட்சிகள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

சிங்கள மக்களால் தமிழ் மக்களுக்கு துன்பம் விளைவிக்கப்பட்டது என்பதை சிங்கள மக்கள் முன்வந்து கூறவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களும் எம்மை நோக்கி வருவர். எம்மீது நம்பிக்கை வைப்பர்.

நாம் இன, மத, கட்சி பேதங்களை மறந்து அகதிகளின் வாழ்வுக்காகப் பாடுபட வேண்டும். இது தொடர்பிலான அனைவரது ஆதரவையும் அரசு பெறவேண்டும்.

(அ-சி)

# வாக்காளர் அட்டைகள் 21ஆம் திகதி விநியோகம்

கொழும்பு, ஜூலை 8

யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைத் தேர்தல்களுகான வாக்காளர் அட்டைகள் விநியோகம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளது.

இந்தத் தினத்துக்கு முன்னர் வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்காக அவற்றைத் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்காக தபால் திணைக்களம் 30 லட்சம் ரூபாவை தேர்தல்கள் திணைக்களத்திடம் கோரியுள்ளது.

யாழ். மாநகரசபைக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் தரை வழியாக அங்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மாநகரசபை வேட்பாளர் அச்சுறுத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை8


தமிழரசுக்கட்சியின் மாநகரசபை வேட்பாளர் கே.என்.கனகரட்ணமும் அவரது ஆதரவாளர்களும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களை அச்சுறுத்தியதுடன் துண்டுப் பிரசுரங்களையும் பறித்துச் சென்றதாக அந்தக்கட்சி யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு சமீபமாக மார்ட்டின் வீதியில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் வேட்பாளர் கே.என். கனகரட்ணத் தையும்அவரது ஆதரவாளர்களையும் அச்சுறுத்தியதோடு துண்டுப்பிரசுரங்களையும் பறித்துச் சென்றுள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்து.

இதுதொடர்பாக தேர்தல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுகப்பட் டுள்ளதாகவும் யாழ். மாவட்டத்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ-9)




# நாடு முழுவதிலும் வைத்திய அதிகாரிகள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்

## ஜனாதிபதியுடன் பேசிய பின்னர் முடிவுக்கு வந்தது

கொழும்பு, ஜூலை 8

நாடு தழுவிய ரீதியில் வைத்தியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் நேற்று ஈடுபட்டனர்.

இதனால் வெளிநோயாளர் பிரிவு வைத்திய ஆலோசனை சேவை, முன்னேற்பாடு செய்யப்பட்ட சத்திர சிகிச்சைகள் என்பன செயலிழந்தன என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். சுகாதார அமைச்சினால் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாங்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர்களுக்கு நியமனம் வழங்குதல் மற்றும் இடமாற்றங்களை வழங்குதல் போன்றவற்றிலும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என வைத்தியர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், அரசியல் ரீதியான தலையீடுகள் காரணமாக சுகாதார அமைச்சின் நடவடிக்கைகளில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுகின்றன எனவும் வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வைத்தியர்கள் சங்கத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பேச்சுகளை அடுத்து இந்த வேலை நிறுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது. (அ-சி)

# முன்னாள் கான்ஸ்டபிள் மட்டு. நகரில் கொலை!

மட்டக்களப்பு தாளங்குடாவில் நேற்று அதிகாலை முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றிய இரத்தினசிங்கம் லூயிஸ் பிறவுன் (வயது - 42) என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

வீட்டில் மனைவி, மக்களுடன் இருந்த வேளை அங்கு நுழைந்த இனந்தெரியாத நபர்கள் இவரைப் பலவந்தமாக வீட்டிற்கு வெளியே இழுத்துச் சென்று வெட்டிப் படுகொலை செய்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ரகமுவ முதலமைச்சரும் மனைவியும் வாகன விபத்தில் காயம்

குருநாகல் பகுதியில் விபத்துக்குள் ளான சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் அவரது மனைவி ஆகி யோர் மேலதிக சிக்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் குருநாகல் பகுதியில் பயணித்து கொண் டிருந்த சமயம் விபத்துக் குள்ளாகினர். இத னைய டுத்து, குருநாகல் வைத்தியசாலையில் அவர்கள் உடனடி யாகச் சேர்க்கப்பட்டனர். தற்போது இவர்கள் இரு வரும் கொழும்பு வைத் தியசாலையின் விபத்துச் சேவை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் மஹிபால ஹேரத் அவ ரது மனை வியுடன் நேற்றுக்காலை குருநா கலில் உறவினர் ஒரு வரின் மரணச் சடங்கில் கலந்துவிட்டு வீடு திரும்பிய வேளையில் அவர்கள் பயணித்த வாகனம் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அருகிலுள்ள மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள் ளானது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழ்ப்பொறியிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டங் களில் இருந்து இணை யத்தளங்களில் தகவல்களை வெளியிட்டு வந்துள்ளார் எனவும் -

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோச னையின் அடிப்படையில் அவர் அரசிற்கும் படை யினருக்கும் எதிரான தகவல்களை இணையத் தளங்கள் ஊடாக வெளியிட்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந் தோர் முகாம் ஒன்றில் வைத்து கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இதில் சந்தேக நபர் ஒருவர் திகம்பத்தான பிரதேசத்தில் இடம்பெற்ற கடற்படையினர் மீதான தாக்குதலுக்குப் பயன்படுத்திய பார ஊர் தியை குண்டுகளைப் பொருத்தும் வகையில் வடிவமைத்துள்ளார் எனவும், மற்றைய சந்தேக நபர் அனுராதபுரம் விமானப் படைத்தளம் மீதான தாக்குதலுக்கான உளவுப் பணிகளை மேற்கொண் டதுடன், தாக்குதல் தினத்தில் அதனை ஒளிப் பதிவு செய்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்டியில் இருந்து சென்ற பொலிஸாரே இவர்களைக் கைதுசெய்துள்ளனர். தடுத்து வைக் கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்ந்து விசார ணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## தமிழர் மீளக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்திருக்கிறோம்.

**கால அட்டவணை கேட்டுள்ளோம்**

அவர்களை சொந்த இடங்களில் விரைந்து குடியமர்த்த வேண்டும் என்று இலங்கை அரசை கேட்டுள்ளோம். அவர்களின் மீள் குடியமர்வு தொடர்பாக கால அட்டவணை ஒன்றை சமர்ப்பிக் குமாறு இலங்கை அரசிடம் கேட்டுள்ளோம்.

இடம்பெயர்ந்தவர்களை 180 நாள்க ளில் குடியமர்த்துவோம் என இலங்கை அரசு எமக்கு உறுதியளித்துள்ளது. மீளக் குடியமரும் மக்க ளுக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராக இருப்பதாக இலங்கைக்குத் தெரிவித்துள்ளோம். தரப்பட்ட கால எல்லைக்குள் குடியமர்த்த ஏற் பாடுகள் செய்யப்படவேண்டுமென இலங்கையி டம் வற்புறுத்தி கேட்டுள்ளோம்.

இடம்பெயர்ந்த மக்களின் மருத்துவ வசதிக ளுக்காக வவுனியாவில் ஆஸ்பத்திரி ஒன்றை அமைத் துள்ளோம். இதுவரை 14 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளித்துள்ளோம்.

**அதிகாரப் பரவலை விரைவில் கொண்டுவர வலியுறுத்துகிறோம்**

13 ஆவது திருத்த சட்டம் மூலம் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்த வில்லை. ஆனால் தமிழ் மக்களின் விருப் பங்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அதிகாரப் பரவலாக்கலை விரைவாக கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தி கேட் டுள்ளோம்.

இந்திய நாடாளுமன்றம் அனுமதித் துள்ள 500 கோடி ரூபா உதவி வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் நலன்க ளுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளோம் - என்றார் அவர்.

இதற்கு முன்னர் தூதர் நண்பகல் யாழ்.பல் கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு துறைசார்ந்த கல்விமான்களுடன் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள், அபிவி ருத்தி ஆகியன தொடர்பாக அவர் ஆராய்ந்தார்.

அதைத் தொடர்ந்து யாழ்.நூலகத்துக்கு வருகைதந்த தூதர் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தார். இந்த நூல்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ளன. அவை இன்று நூலகரிடம் கையளிக்கப்படும்.

அதன் பின்னர் தூதுவர் அலோக் பிரசாத் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் வைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடனும் அரசாங்க அதிபர் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடனும் கலந்து ரையாடல் ஒன்றை நடத்தினார்.

இக் கலந்துரையாடலில் சம கால குடா நாட்டு நிலை தொடர்பாக கலந்துரையாடப் பட்டதுடன் கலாசார சம்பந்தமான விடயங்கள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாறப்பட்டதாக அறியப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ்.மாநகர ஆணையாளர் செ.சரவ ணபவ, முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவ ஞானம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், யாழ்.மாநகர சபை தமிழரசுக் கட்சி வேட்பாளர் எம்.றெமேடி யஸ், ஈ.பி. டி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் எஸ். சிவதாசன், ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி யின் பொதுச்செயலாளர் எஸ்.சிறிதரன் உட்பட ஏனைய கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற தூதுவர் அலோக் பிரசாத்தை வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஈ.தேவநேசன் வரவேற்றார்.

வைத்தியசாலையைச் சுற்றிப்பார்வையிட்ட பின் தேவைகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார். வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நிர்மாணிக்கப் பட்டுவரும் 5 மாடிக் கட்டடத்தின் 3 ஆவது, 4 ஆவது மாடிகளை அமைக்க இந்தியா உதவும் என்று அவர் கூறினார். (அ-1-120-111)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிர தமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவால் நேற்று நாடா ளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட இப்பிரேர ணைக்கு ஆதரவாக 103 வாக்குகளும், எதிராக 11 வாக் குகளும் அளிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய கூட்ட மைப்பினர் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.

வாக்களிப்பு நடைபெற்ற நேரம் ஐக்கிய தேசி யக் கட்சி உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை.

## அகதிமக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பத்மினி சிதம்பரநாதனும் உரையாற்றினார்.

அவர் தமது பேச்சின் போது சோகம் ததும்ப விவரித்துக்கொண்டு வந்தார். வவுனியா அகதி முகாம்களிலுள்ள மக்கள் படும் துன்பத்தையே அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது தம்மை கட்டு படுத்தக் கொள்ளமுடியாத நிலையில் கண் ணீர் விட்டு அழத்தொடங்கிவிட்டார். தொடர்ந்து பேசமுடியாதபடி அவரது குரல் தளதளத்தது; தேம்பித் தேம்பி அழுதார். இதனால் சிறிது நேரம் பேச்சை நிறுத்தி, தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார். சபையில் இருந்த எம்.பிக்கள் இதனை அனு தாபத்துடன் பார்த்தனர்.

## தமிழர் வாழ்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிப் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதால் நாட்டில் இப்போது முழுமையான சமாதானம் நிலவுகின்றது. மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றனர்.

30 வருடங்களாக மிகவும் பலம் வாய்ந்திருந்த புலிகள் இயக்கத்தை நாம் தோற்கடித்து விட்டோம். அந்த அமைப்பானது பணம், ஆயுதம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பெற்று பலமடைந்திருந்தது. மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது.

புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் தற்போது தமிழ் மக்களைக் காட்டி புலிகளுக்காக கண்ணீர் வடிக்கின்றனர். அவர்கள் புலியின் எஞ் சிய புள்ளிகளை மூடி மறைக்கின்றனர்.

**எங்களை நம்பி வந்தவர்களை பாதுகாப்பது எமது கடமை**

பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து விடுபட்டு உடுத்த ஆடையுடன் எம்மை நம்பி வந்த 3 இலட்சம் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டி யது எமது கடமை. அதை நாம் செய்து வருகின்றோம். ஆனால், சிலர் இதில் குறைகளை மாத்திரம் சுட்டிக் காட்டுகின்றனர். நிறைவுகளை விட்டுவிடுகின் றனர். குறைகள் இல்லாமல் இல்லை. அதை நாம் நிவர்த்தி செய்துகொண்டு வருகின்றோம்.

அவ நம்பிக்கையை நீக்கி சகோதரத்துவத்தை வளர்த்து அதன் ஊடாக வடக்கையும் தமிழ் மக் களின் வாழ்வையும் கட்டியெழுப்புவதே அரசின் ஒரே நோக்கு. அதன் அடிப்படையில் அரசு செயற் பட்டு வருகின்றது.

**தமிழர்களின் அவநம்பிக்கையை நீக்க வேண்டும்**

வடக்கு மக்கள் கறுப்பு கண்ணாடிகளை அணிந்து கொண்டே சிங்கள மக்களைப் பார்த் தனர். புலிப் பயங்கரவாதமே இதற்குக் காரணம். தமிழர் மனதில் இருந்த இந்த அவநம்பிக்கையை நாம் நீக்க வேண்டும்.

எம்மை நம்பி வந்த மக்களை மீள் குடியமர்த்த நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அம்மக்களின் பகுதிகளில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங் கள், பணம், தங்க நகைகள் போன்றவற்றை நாம் கண்டெடுத்து வருகின்றோம். இந்த ஆயுதங்கள் தமிழீழத்தை உருவாக்குவதற்காக மாத்திரமா பயன்படுத்தப்படவிருந்தன என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதேவேளையில் அயல் நாட்டு அரசியல் வாதிகளும் இந்நாட்டின் உண்மைநிலையை உணர்ந்துள்ளனர். இதுவொரு நல்ல சைகை யாகும். ஆகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்க வேண் டும் - என்றார். (அ-சி)

## இந்தியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு :-

புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டை இரண்டாகப் பிரிக்கக்கூடிய அரசியல் தீர்வு பற்றி அரசு பேசுகின்றது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவ டிக்கை எடுக்கப்படுகிறது.

இது தொடர்பில் அமைச்சர்களுக்கிடையில் ஒருமைப்பாடு இல்லை. இதை நடைமுறைப்படுத் தினால் அரசில் இருந்து விலகுவோம் என்று சில அமைச்சர்கள் கூறுகின்றார்கள். சிலர் இரண்டு அமைச்சுப் பதவிகளைத் தந்தால் இது தொடர்பில் வாய் திறக்கமாட்டோம் என்கின்றனர்.

புலிப் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க நாம் உதவியதுபோல் எஞ்சியுள்ள பயங்கரவாதத்தை யும் ஒழித்துக்கட்ட நாம் உதவுவோம். ஆனால், நாட்டை மீண்டும் பிரிவினைவாதத்திற்கு இட்டுச் செல்லும் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தரமோட்டோம்.

குறிப்பாக இந்தச் சட்டத்தின் கீழ் காணி மற் றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க அரசு முயற்சி செய்து வருகின்றதால் இதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்க முடியாது.

**படையினர் மீட்ட நிலத்தை தாரைவார்க்கும் செயல்**

படையினர் மிகவும் பாடுபட்டு இந்தக் காணி களைப் புலிகளிடமிருந்து மீட்டுக் கொடுத்தனர். அத்தகைய நிலத்தை மீண்டும் தாரைவார்க்க அரசு முற்படுகிறது. இது படை வெற்றியை அவமதிப்பதாக அமைந்துவிடும்.

இலங்கை அரசு இந்தியாவின் பணத்திற்கும் அதிகாரத்திற்கும் அடிபணிந்துதான் இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறது.

இலங்கை நிலைமை தொடர்பாக இந்தியா நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டு இந்நாட்டின் வளங்களைச் சுரண்டு கின்றது. இதற்கு அரசு இடமளிக்கின்றது.

வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி யும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. யுத்தத்தை வென்ற எமது படையினரால் கண்ணி வெடிகளை அகற்ற முடியாதா?

அதேபோல் அகதிகளை மீள்குடியமர்த்தும் பணியும் இந்தியாவிடம்தான் ஒப்படைக்கப்பட் டுள்ளது. அரசின் இந்தச் செயற்பாட்டை நாம் எதிர்க்கின்றோம்.

எல்லாவிடயங்களையும் இந்தியாவிடம் ஒப்படைத்தால் தமிழ் மக்கள் இந்தியாவில்தான் நம்பிக்கை வைப்பர். இலங்கை அரசு மீது நம்பிக்கை இழந்துவிடுவர்.

**மீளக்குடியமர்த்தாவிடில் மீண்டும் ஒரு பிரபாகரன் தோன்றுவார்**

இடம்பெயர்ந்த 3 லட்சம் மக்களை மீளக் குடியமர்த்த வேண்டியது அரசு செய்ய வேண்டிய கடமையே. அப்படி இல்லாவிட்டால் இந்த மக்கள் விரக்தியடைந்துவிடுவர். இதனால் மீண்டும் ஒரு பிரபாகரன் தோன்றுவதற்கு இடமுண்டு.

கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் கூட இன் னும் முழுமையாக மீள்குடியமர்த்தப்படவில்லை. அங்கு இன்னும் கண்ணிவெடிகள் உள்ளன என்று அரசு சொல்கிறதா?

சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. ஆனால், அங்கு இந்தியாவின் செயற்றிட்டம் நடைமுறைப்படுத் தப்படுகின்றது.

அகதி முகாம்களில் புலிகள் உள்ளனர் என்று கூறி மீண்டும் மீண்டும் மக்கள் மீது புலிச் சாயம் பூசி அம்மக்களை மீள்குடியமர்த்துவதை அரசு தடுக்கக்கூடாது.

இந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் இந்த மக்களைப் பார்வையிட அரசியல் கட்சிகளுக்கு அரசு அனுமதி வழங்கவேண்டும் - என்றார்.

## நிவாரணப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் பொருள்கள் ஏற்றப்பட்டன. நேற்றுச்செவ் வாய்க்கிழமையன்று சென்னை துறைமுகத்திலி ருந்து அது இலங்கைக் குப் பயணமானது.

384 தொன்கள் நிவாரணப் பொருள்களுடன் 'கொலராடோ' கப்பல் இலங்கைக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது. நேற்றுக்காலை புறப்பட்ட இக் கப்பல் நேற்று நள்ளிரவில் இலங்கை சென்றடை யும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதன் பின்னர் நிவாரணப் பொருள்களை செஞ் சிலுவைச் சங்கத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தமிழர் களுக்கு இலங்கை அரசு வழங்கும் எனத் தெரி விக்கப்படுகிறது. (அ-சி)


விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

O/L DAY CLASS பழைய பாடத்திட்டம் ஆரம்பம்:- 10.07.09 (8.30)

O/L EVENING CLASS இற்கு PAPER CLASS

SCI. :- திரு.N.தேவா

Math. :- திரு.விக்கி, திரு.ரூபன்

ஆரம்பம்:- 11.07.2009 (12 a.m.)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

தரம் 6 தொடக்கம் O/L வரை

2 ஆம் தவணைப் பரீட்சைக்கான வினாத் தாள்கள் பெறவிரும் பும் நிறுவனங்கள், தனி நபர் 15 ஆம் திகதிக்கு முன் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள் ளவும்.

மாபெரும் கருத்தரங்கு

தமிழ்: திரு.குழந்தை

எதிர்பார்க்கைக்குரிய வினாக்கள்

வெளிமாணவர்கள் இடநெருக்கடியை தவிர்த்துக்கொள்ள இன்று முதல் அனுமதி களைப் பெற்றுக்கொள்ளவும்.

மு.கு. நிறுவனத்தில் நேரசூசியைப் பெற்றுக்கொள்ளவும்.

விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.


# கண்ணீர் அஞ்சலி



எமது விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரும் முன்னாள் வீரருமான

## குணரத்தினம் சிவருபன்

வவுனியாவில் 04.07.2009 அன்று அகாலமர ணமடைந்த செய்திகேட்டு பெருந்துயரடை கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

கணேசன் விளையாட்டுக் கழகம்.


YOGI'S BEAUTY

The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன

1. அழகுக் கலை பயிற்சிகள் (Beauty Culture - Facial Classes)
2. ஒப்பனை, தலை அலங்காரங்கள் (Bridal Maked - up and Hair Styles)
3. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing & Sugar Art on Fondant Strctures)
4. கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Cake Icing and Sugar flowers)
5. நவீன முறையில் 5 விதமான சாறிபிளவுஸ் கட்டிங்கள் (Latest Saree Blouse Cuttings)

ஆரம்பம்:- 11.07.2009 காலை 10 மணி

பயிற்சிகள் முடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

Mrs. Yogini Shanmuganathan

Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make - Up & Character Maked-up (India)
Diploma in Home Economics (India and Sri Lanka)

T.Phone: 0212222796, 0602210077, 0777164923, 0718788814

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா ! நீங்களும் பட்டதாரி ஆகலாம் .....

அனைத்து துறைகளிலும்

இந்தியாவில் பட்டப்படிப்பு

July 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்

HINDUSTAN COLLEGE OF ARTS AND SCIENCE Affiliated To MADRAS UNIVERSITY

A/L அனைத்து துறை மாணவர்களுக்கு...

UNDER GRADUATE PROGRAMME (Full time - 3yrs)
B.Sc. - Biochemistry,
B.Sc .- Electronics & Communication Science,
B.Sc. - Microbiology ,
B.Sc. - Biotechnology,
B.Sc. - Computer Science,
B.Sc. - Information Systems Management,
B.Sc. - Electronic Media,
B.Sc. - Visual Communication)
B.Com. (General)
B.C.A
B.B.A

A/L Arts படித்த மாணவர்களும் வர்த்தக (BBA,B com) கணனி (BCA) துறைகளில் பட்டப்படிப்பைத் தொடரும் வாய்ப்பு

POST GRADUATE PROGRAMME
M.Sc.
(Information Technology, Computer Science, Applied Microbiology, Biotechnology, Bioinformatics, Electronic Media)
M.A
Public Relations

10 நாட்களில் அனுமதி பெற்றுத்தரப்படும்.

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

A/L கணித துறை மாணவர்களுக்கு பொறியியல் கற்கைகள்...

COURSES OFFERED
B.E / B. Tech. Degree [Full time – 4 yrs]
B.E. - Civil Engineering
B.E. - Mechanical Engineering
B.E. - Computer science & Engineering
B.E. - Electrical & Electronics Engineering
B.E. - Electronics & Communication Engineering
B.Tech - Information Technology
B.Tech - Fashion Technology
M.E. Degree [Full time – 2yrs]
MBA - Master of Business Administration
MCA - Master of Computer Applications

ELIGIBILITY 3 PASS IN A/L

August 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்

ADMISIONS ARE GIVEN IN COLOMBO & JAFFNA

V4 Educational Consultancy(Pvt)Ltd

Head Office- #7-1/1, W.A Silva mawatha, Wellawatte, Colombo-06.

Branch- #274, Pointpedro Road, Aanaippanthi Junction, Jaffna.

Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com

T.P- 0773867257, 0775936343, 0212228374


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org